# பெரியார் அரசு கலைக் கல்லூரி
## கடலூர்
# தமிழ்த்துறை

# இளங்கலைத் தமிழிலக்கியம்
### முதலாம் ஆண்டு - முதற்பருவம்
### (2020-21)

## CTA 11 . இக்கால இலக்கியம்
### அலகு - 5, சிறுகதை (மண்மனக்கும் கதைகள்)
### பகுதி - 2

பாட ஆசிரியர்
முனைவர் ஜா.இராஜா
உதவிப்பேராசிரியர்,தமிழ்த்துறை
பெரியார் அரசு கலைக்கல்லூரி, கடலூர்

# புலிக்கலைஞன்

அசோகமித்திரன்

பகல் ஒரு மணியலிருந்து இரண்டு வரை எங்களுக்கு டிபன் இடைவெளி. முன்பெல்லாம் இரண்டரை வரை என்றிருந்ததாகச் சொல்வார்கள். அப்போது காலையில் வேலை ஆரம்பிக்கும் நேரமும் பதினொன்றாக இருந்திருக்கிறது. பதினொரு மணி காரியாலயத்திற்கு வீட்டில் பத்தரை பத்தே முக்காலுக்குச் சாப்பிட உட்கார்ந்து காரியாலயத்திற்குப் பதினொன்றரைக்கு வந்து சேர்ந்து, உடனே ஒரு மணிக்கு டிபன் சாப்பிடப் போவது அசாத்தியமாக இருந்திருக்கிறது.

அதனால்தான் காண்டீனில் எப்போவும் இரண்டு மணிக்குத்தான் நிஜமான கூட்டம் இருக்கும். இப்போது காலை பதினொரு மணி என்பதைப் பத்தரையாக்கி, அதையும் ஒரு மாதமாகப் பத்து என்று உத்தரவிட்டிருக்கிறார்கள். டிபனுக்காகப் பிற்பகல் ஒன்றிலிருந்து இரண்டு வரை. மாலை ஐந்து மணிக்கு முடியும் காரியாலயம், இப்போது ஆறு மணிவரை நீட்டி வைக்கப்பட்டுவிட்டது.

வேலை எப்போதும் நடந்த வேலை தான். ஃபாக்டரி பிரிவு என்றிருந்த தச்சுவேலை செய்பவர்கள், எலெக்ட்ரிகல் பிரிவைச் சேர்ந்தவர்கள், லாபரட்டரிக்காரர்கள் இவர்களுக்கு என்றுமே எட்டு மணி நேரவேலை. அதேபோலக் கணக்குப் பிரிவு அக்கவுண்ட்ஸ் டிபார்ட்மெண்ட் இவர்களுக்கு எங்கே வேலை நடந்தாலும் நடக்காது போனாலும் வருடமெல்லாம் கணக்கு எழுதிக் கொண்டே இருக்க வேண்டும். அப்புறம் டெலிபோன் ஆப்ரேட்டர் டெலிபோனுக்கு இடைவெளி, விடுமுறை





என்றிருந்ததே கிடையாது. ஆதலால் இந்தப் பிரிவுகளில் அடங்காதவர்களுக்குத் தான் அவ்வப்போது காரியாலய நேரத்திலேயே ஓய்வு கிடைக்கும். நாட்கணக்கில், வாரக்கணக்கில், மாதக்கணக்கில்.

எனக்குத் தெரிந்து ஒருமுறை எங்கள ஸ்டுடியோ ஒன்றரை வருடம் திரைப்படமே எடுக்காமல் இருந்திருக்கிறது. ஒன்றரை வருடம் வேலையொன்றும் செய்யாமல் சம்பளம் வாங்கிக் கொண்டு, காரியாலய நேரத்தில மேஜை மீது காலைத் தூக்கிப் போட்டுக் கொண்டு தூங்கி, தலைமயிரை நரைக்க வைத்து, அடிவயிற்றில் ஊளைச்சதை சேர்த்து, டயாபடிஸ் நோய்க்கு இடம் கொடுத்து, சிந்தனைக்கு இலக்கு இல்லாத காரணத்தால் விழிகளுக்கு அலைபாயக் கற்றுக் கொடுத்து, பேச்சில் நிறைய உளறலை வரவழைத்துக் கொள்ளலாம்; ஒன்றரை ஆண்டுக்குப் பிறகு நிஜமாகவே வேலை வந்தபோது நிர்ப்பந்த ஓய்வு ஒரு முடிவுக்கு வந்ததில் உற்சாகக் கிளர்ச்சி கொள்ளலாம். அப்படிப் பட்ட கிளர்ச்சி கொண்டு, அதே நேரத்தில் வேலை செய்யும் பழக்கம் அறுபட்டுப் போனதால் தடுமாறலாம்.

அப்படிப்பட்ட கிளர்ச்சியையும் தடுமாற்றத்தையும் இன்று, நாளை என்று நாங்கள் எதிர்பார்த்திருந்த நாளில் தான் அவன் ஒரு பிற்பகல் நாங்கள் டிபன் முடித்து வெற்றிலை புகையிலை போட்டுச் சுவைத்துக் கொண்டிருந்த நேரத்தில் வந்து சேர்ந்தான்.

'என்னப்பா வேணும்?' என்று சர்மா கேட்டார். சர்மா ஒரு காலத்தில் டிரௌசர் அணிந்தவராகவே தான் காணப்படுவார். போலீஸ் சப்-இன்ஸ்பெக்டராக வேலை பார்த்தவர். நாடகம், கதைகள் எழுதி பிரசுரம் செய்து பெயர் வாங்கி, எங்கள் ஸ்டுடியோவின் கதை இலாகாவில் ஒரு புள்ளியாகி விட்டிருந்தார். தங்கமான பழைய நாட்களில் எங்கள் முதலாளியைத் தன்னுடைய மோட்டார் சைக்கிள் பில்லியனில் ஏற்றிக் கொண்டு வெளிப்புறக்



Scanned with CamScanner

காட்சிகள் எடுக்கக்கூடிய இடங்களைத் தேர்ந்தெடுத்திருக்கிறார். இப்போது வேஷ்டி அணிந்து, புகையிலை போடுவதில் மிகவும் பழக்கப்பட்டு விட்டார். அவர் எழுந்து நின்றால் கழுத்துக்குக்கீழ் இரு தோள்பட்டையும் சச்சதுரமாக இறங்குவதுதான் அவர் ஒரு காலத்தில் தேகப்பயிற்சி அமைத்துக் கொடுத்த உடற்பாங்கு கொண்டவர் என்பதைக் காண்பித்தது.

சிறு அறை. சிறிதும் பெரிதுமாகப் பழங்காலத்து மேஜைகள் மூன்று. பெரிய மேஜை பின்னால் உட்கார்ந்து கொண்டிருந்த சர்மாதான் அந்த அறைக்குச் சபாநாயகரெனக் கொள்ள வேண்டும். நாங்கள் உட்கார்ந்திருந்த நாற்காலிகளைத் தவிர இன்னும் ஒன்று அதிகப்படியாக இருந்தது. எங்களுடையது எல்லாமே வெவ்வேறு விதமான பழங்கால நாற்காலிகள். அதிகப் படியான நாற்காலியில் ஒருகால் குட்டை. யார் வந்து அதில் உட்கார்ந்தாலும் ஒரு புறம் சாய்ந்து, அதில் உட்கார்ந்தவரை ஒரு கணம் வயிற்றைக் கலக்கச் செய்யும். வந்தவன் அந்த நாற்காலியின் முதுகுப் புறத்தைப் பிடித்துக் கொண்டு நின்றான்.

"என்னப்பா வேணும்?" என்று சர்மா கேட்டார்.

'சனிக்கிழமை வீட்டுக்கு வந்தேனுங்க' என்று அவன் சொன்னான்.

'சனிக்கிழமை நான் ஊரிலேயே இல்லையே?' என்று சர்மா சொன்னார்.

'காலையிலே வந்தேனுங்க. நீங்க கூட ஒரு குடையை ரிப்பேர் பண்ணிட்டிருந்தீங்க'.

'ஓ, நீயா? வேலாயுதமில்லே?'

'இல்லீங்க, காதர், டகர் பாயிட் காதர்'.

'நீ வந்திருந்தயா?'





'ஆமாங்க, வெள்ளை சொன்னார். ஐயாவை விட்டிலே போய்ப்பாருன்னு'.

'யாரு வெள்ளை?'

'வெள்ளைங்க. ஏஜண்ட் வெள்ளை'.

இப்போது சர்மாவுக்கு விளங்குவது போலிருந்து. வெள்ளை என்பவன்தான் எங்கள் ஸ்டுடியோவில் பெரிய கூட்டங்களைப் படம் எடுக்க வேண்டியிருந்தால் நூற்றுக்கணக்கில் ஆண்களையும் பெண்களையும் சேர்த்துக் கொண்டு வருபவன். கூட்டமாக இருப்பதைத் தவிர அவர்களிடமிருந்து நடிப்பு ஒன்றும் தேவைப்படாது. நபருக்கு ஒரு நாளைக்குச் சாப்பாடு போட்டு இரண்டு ரூபாய் என்று கணக்கு. வெள்ளை ஒரு ரூபாய் வாங்கிக் கொண்டு விடுவான்.

'இப்போ ஒண்ணும் கிரவுட் சீன் எடுக்கலையேப்பா' என்று சர்மா சொன்னார்.

'தெரியுங்க. உங்களைப் பாத்தா ஏதாவது ரோல் தருவீங்கன்னு அவரு சொன்னாரு'.

'யாரு சொன்னாரு?'

'அதாங்க, வெள்ளை சாரு'.

சர்மா எங்களைப் பார்த்தார். நாங்கள் இருவரும் அந்த ஆளைப் பார்த்தோம். குள்ளமாகத்தான் இருந்தான். ஒரு காலத்தில் கட்டுமஸ்தான உடம்பு இருந்திருக்க வேண்டும். இப்போது தோள்பட்டை எலும்பு தெரிய இருந்தான். நன்றாகத் தூக்கியிருந்த அவனுடைய தாடை முட்டுக்கள் அவனுடைய கரிய கன்னங்களை அளவுக்கு மீறி ஒட்டிப் போனதாகக் காண்பித்தன. வெள்ளை கொண்டு வரும் ஆட்கள் எல்லாரும் அநேகமாக அப்படித்தான் இருப்பார்கள். ராமராஜ்யம் பற்றிப் படம்



Scanned with CamScanner

எடுத்தால் கூடப் படத்தில் வரும் பிரஜைகள் தாது வருஷத்து மக்களாகத்தான் இருப்பார்கள்.

'நான் வெள்ளை கிட்டே சொல்லியனுப்பறேன்' என்று சர்மா சொன்னார். நாங்கள் சாய்ந்து கொண்டோம். பேட்டி முடிந்துவிட்டது.

அவன் 'சரிங்க' என்றான். பிறகு குரல் சன்னமடைந்து, 'உடனே ஏதாவது பார்த்துக் கொடுத்தீங்கன்னா கூடத் தேவலாம் சார்' என்றான்.

'ஷூட்டிங் ஒண்ணும் இன்னும் ஆரம்பிக்கலையேப்பா, கிரவுட் சீனெல்லாம் கடைசியிலேதான் எடுப்பாங்க.'

'அதுக்கில்லீங்க, ஏதாவது ரோல் தாங்க.'

'உனக்கு என்ன ரோல்பா தர முடியும்? அதோ காஸ்டிங் அசிஸ்டெண்ட் இருக்காரு. அவர்கிட்டே எல்லா விவரமும் தந்துட்டுப்போ.'

நான்தான் காஸ்டிங் அசிஸ்டெண்ட்.. வந்தவன் மாதிரி ஆயிரக்கணக்கான நபர்களின் பெயர், வயது, உயரம், முகவரி, எல்லாம் குறித்து வைத்திருந்தேன். அந்தக் குறிப்புகளிலிருந்து தேவைப்படும்போது நான்கு பேருக்குக் கடிதம் போட்டால் மூன்று கடிதங்கள் திரும்பி வந்துவிடும். விலாசதாரர் வீடு மாற்றிப் போய் விட்டார் என்று. அப்புறம் எல்லாம் வெள்ளைதான்.

ஆனால் அவன் என்பக்கம் திரும்பவில்லை. இந்த மூவரில் சர்மாதான் மிக முக்கியமானவர் என்று அவன் தீர்மானமாக இருந்தான்.

'நீங்க பாத்துச் சொன்னாத்தாங்க ஏதாவது நடக்கும்' என்றான்.

'உனக்கு நீஞ்சத் தெரியுமா?' என்று சர்மா கேட்டார்.





'நீச்சலா?' என்று அந்த ஆள் திரும்பக் கேட்டான். பிறகு, 'கொஞ்சம் கொஞ்சம் தெரியுங்க' என்றான்.

'கொஞ்சமெல்லாம் தெரிஞ்சாப் போறாது. ஒரு ஆளு மேலேந்து ஆத்துலே பாய்ஞ்சு நீஞ்சிப்போற மாதிரி ஒரு சீன் எடுக்க வேண்டியிருக்கும். அதுக்கு நீ போறாது.'

'எனக்கு டகர் பாயிட் வரும்க. என் பேரே டகர் பாயிட் காதர்தானுங்க'.

'அதென்ன டகர் பாட்?'

இப்போது எல்லோரும் கவனமாக இருந்தோம். ஒருவருக்கும் புரியவில்லை.

அவன் சொன்னான், 'புலிங்க, புலி. புலி பாயிட்.'

'ஓ, டைகர் ஃபைட்டா, டைகர் ஃபைட். நீ புலியோட சண்டை போடுவியா?'

'இல்லீங்க, புலி வேஷம் போடுவேங்க. அதைத்தான் டகர் பாயிட்னுவாங்க, இல்லீங்களா?'

'புலி வேஷக்காரனா நீ? புலி வேஷமெல்லாம் சினிமாவுக்கு எதுக்கப்பா? புலி வேஷமா? சரி, சரி, வெள்ளை வரட்டும். ஏதாவது சான்ஸ் இருந்தா கட்டாயம் சொல்லி அனுப்பறேன்'.

'நான் ரொம்ப நல்லா டகர்பாயிட், பண்ணுவேங்க. நிஜப்புலி மாதிரியே இருக்கும்.'

'நிஜப்புலிக்கு நிஜப்புலியே கொண்டு வந்துவிடலாமே'.

'இல்லீங்க, நான் செய்யறது அசல் புலி மாதிரியே இருக்கும். இப்ப பார்க்கிறீங்களா?'



Scanned with CamScanner

'ஆஹாம், வேண்டாம்பா, வேண்டாம்பா'.

'சும்மா பாருங்க சார். ஐயாவெல்லாம் எங்கே புலியாட்டம் பார்திருப்பாங்க'.

'ஏன், ஒவ்வொரு மொகரத்துக்கோ ரம்ஜானுக்கோ தெருவில் புலி வேஷம் நிறையப் போகிறதே?'

'நம்பளது வேற மாதிரிங்க. நிஜப்புலி மாதிரியே இருக்கும்'.

அவன் எங்கிருந்தோ ஒரு புலித் தலையை எடுத்தான். அப்போதுதான் அவன் ஒரு துணிப்பையை எடுத்து வந்திருந்தது தெரிந்தது. புலித்தலை என்பது தலையின் வெளித்தோல் மட்டும். அதை அவன் ஒரு நொடியில் தன் தலையில் அணிந்து கொண்டு முக வாய்க்கட்டை அருகே அந்தப் புலித் தலை முகமூடியை இழுத்து விட்டுக் கொண்டான். அவன் சொந்தக் கண்களோடு ஒரு சிறுத்தையின் முகம் உடையவனாக மாறினான். அறையை ஒரு வினாடி அங்குமிங்கும் பார்த்துக் கொண்டான்.

'பேஷ்' என்று சர்மா சொன்னார். நாங்கள் அவனையே பார்த்த வண்ணம் இருந்தோம்.

அவன் கைகளை உயரத்தூக்கி ஒருமுறை உடம்பைத் தளர்த்திக் கொண்டான். அப்படியே குனிந்து நான்கு கால்களாக நின்று முகத்தை திருப்பித் திருப்பிப் பார்த்தான்.

'பேஷ்' என்று சர்மா மீண்டும் சொன்னார்.

அவன் பூனை போல் முதுகை மட்டும் உயர்த்தி உடலை வளைத்துச் சிலிர்த்துக் கொண்டான். பிறகு வாயைத் திறந்தான். நாங்கள் திடுக்கிட்டோம். அவ்வளவு நெருக்கத்தில் பயங்கரமாகப் புலி கர்ஜனையை நாங்கள் கேட்டது கிடையாது.

அவன் மீண்டும் ஒருமுறை புலியாகக் கர்ஜித்துத் தன் பின்பக்கத்தை மட்டும் ஆட்டினான். அப்படியே நான்கு கால்களில்





அறையில் காலியாயிருந்த நாற்காலி மீது பாய்ந்து ஒடுங்கினான். நாற்காலி தடதடவென்று ஆடியது. நான் 'ஐயோ!' என்றேன்.

அவன் நான்கு கால் பாய்ச்சலில் என் மேஜை மீது தாவினான். கண் இமைக்கும் நேரத்தில் சர்மா மேஜை மீது பாய்ந்தான். சர்மா மேஜை மீதும் தாறுமாறாகப் பல காகிதங்கள், புத்தகங்கள், வெற்றிலைப் பொட்டலம் முதலியன சிதறி இருந்தன. ஒன்றின் மீது கூட அவன் கால்கள் படவில்லை. அவன் சர்மா மேஜை மீது பதுங்கி சர்மாவைப் பார்த்து மீண்டுமொருமுறை குலை நடுங்க வைக்கும் முறையில் கர்ஜித்தான். அங்கிருந்து அப்படியே உயர மேலே பாய்ந்தான். நாங்கள் எல்லோரும், 'ஓ!' என்று கத்திவிட்டோம்.

அது பழங்காலத்துக் கட்டிடம். சுவரில் நெடுக சுமார் பத்தடி உயரத்தில் இரண்டங்குலத்திற்கு விளிம்பு மாதிரி இருந்தது. ஒரு பக்கச் சுவரில் அந்த விளிம்புக்குச் சிறிது உயரத்தில் ஒரு ஒற்றைக் கம்பி போட்ட ஜன்னல் வெண்டிலேட்டராக இருந்தது. அதில் ஏகமாகப் புழுதி, அழுக்கு, ஒட்டடை படிந்து இருந்தது.

அவன் நான்கு கால்களையும் வைத்து ஆளுயரத்திற்கும் மேல் எகிறி எங்கள் தலைக்கு மேல் அந்த ஈரங்குலச் சுவர் விளிம்பில் ஒரு கணம் தன்னைப் பொருத்திக் கொண்டான். பிறகு கைகளால் வெண்டிலேட்டர் கம்பியைப் பிடித்துக் கொண்டு மீண்டும் புலிபோலக் கர்ஜித்தான்.

'பத்திரம்பா, பத்திரம்பா!' என்று சர்மா கத்தினார். அந்த உயரத்தில் அவன் முகத்துக்கு நேரே கூரை மின்சார விசிறி பிசாசாகச் சுற்றிக் கொண்டிருந்தது. அவனுக்கும் அந்த விசிறிப் பட்டைகளுக்கும் நடுவே சில அங்குலங்கள் கூட இருக்காது.

அவன் அவ்வளவு உயரத்திலிருந்து அப்படியே நாற்காலி மீது தாவினான். அப்படியே எம்பித் தரையில் குதித்தான்.



Scanned with CamScanner

நாங்கள் திகிலடங்காத அதிர்ச்சியில் இருந்தோம். சிறுத்தை முகத்திலிருந்த அவன் கண்கள் புலிக்கண்களாக மின்னின. இன்னொரு முறை சிறுத்தை பயங்கரமாக வாயைப் பிளந்து கர்ஜித்தது. அடுத்த கணம் அவன் உடல் தளர்ந்து தொங்கியது. அவன் எழுந்து நின்று கொண்டான்.

சர்மாவால் கூட பேஷ் என்று கூறமுடியவில்லை. அவன் சிறுத்தை முகமூடியைக் கழற்றிவிட்டான்.

நாங்கள் எல்லோரும் பேச முடியாமல் இருந்தோம். அவன்தான் முதலில் பழைய மனிதனானான்.

'நான் கட்டாயம் ஏதாவது பார்க்கறேம்பா' என்று சர்மா சொன்னார். அவர் குரல் மிகவும் மாறியிருந்தது. அவன் கையைக் குவித்துக் கும்பிட்டான்.

'நீ எங்கேயிருக்கே?' என்று சர்மா கேட்டார். அவன் மீர்சாகிப் பேட்டை என்று சொல்லி, ஒரு எண், சந்தின் பெயர் சொன்னான். நான் குறித்துக் கொண்டேன். அவன் தயங்கி, 'ஆனா, எவ்வளவு நாள் அங்கே இருப்பேன்னு தெரியாதுங்க' என்றான்.

'ஏன்?' என்று சர்மா கேட்டார்.

'இல்லீங்க ...' என்று ஆரம்பித்தவன் சடலென்று சர்மா காலில் விழுந்தான்.

'எழுந்திருப்பா, எழுந்திருப்பா காதர்' என்று சர்மா பதறினார். நாங்கள் நின்றிருந்தோம். அவனும் எழுந்து கண்களைத் துடைத்துக் கொண்டான். 'நம்ம சம்சாரம் வீட்டுப் பக்கமே வராதேன்னு சொல்லியிருக்குங்க' என்றான். அவன்தான் சில நிமிஷங்களுக்கு முன்பு புலியாக இருந்தான்.

'நான் சம்பாரிச்சு எவ்வளவோ மாசமாகுதுங்க. அது தான் என்ன பண்ணும்? நாலு குழந்தைங்க. எல்லாம் சின்னச் சின்னது.' – அவன் இப்போது அழுது கொண்டிருந்தான்.





சர்மாவுக்கு ஏதோ தோன்றி, 'நீ இன்னிக்குச் சாப்பிட்டாயா?' என்று கேட்டார்.

அவன் 'இல்லீங்க' என்றான். அவன் அன்றில்லை, எவ்வளவோ நாட்களாகச் சாப்பிடவில்லை என்பது கூடக் கேட்கத் தேவையற்றதாயிருந்தது.

சர்மா அவர் ஜேபியில் கையை விட்டார். நாங்களும் உடனே எங்கள் பைகளில் துளாவினோம். சில்லறை எல்லாம் சேர்ந்து இரண்டு ரூபாயிருக்கும். சர்மா, 'இந்தா, இதைக் கொண்டுபோய் முதல்லே காண்டீனுக்குப் போய் நன்னாச் சாப்பிடு' என்றார்.

அவன் 'வேண்டாங்க' என்றான்.

'என்ன வேண்டாம்? போய்ச் சாப்பிடுப்பா முதல்லே' என்று சர்மா சொன்னார்.

'ஏதாவது ரோல் வாங்கித் தாங்க ஐயா' என்று அழுது கொண்டே அவன் சொன்னான்.

சர்மாவுக்கு அவ்வளவு கோபம் வந்து நான் பார்த்ததில்லை. 'கொடுத்த பணத்தை நீ எப்படீய்யா வாங்கிக்க மாட்டேன்னு சொல்லுவே? பணத்தை மறுத்தா உனக்குப் பணம் எங்கேய்யா வரும்? ஒரு சல்லீன்னாலும் லஷ்மீய்யா. உனக்கு எங்கேய்யா லஷ்மீ வருவா? போ, வாங்கிண்டு முதல்லே சாப்பிடு' என்று கத்தினார்.

அவன் அழுகை ஓய்ந்து பணத்தை வாங்கிக் கொண்டான். சர்மா இதமாகச் சொன்னார். 'ரோல்லெல்லாம் என் கையிலே இல்லேப்பா. உனக்கு முடிஞ்சது நான் செய்யறேன். போ, முதல்லே வயத்துக்கு ஏதாவது போடு.' பிறகு என்னைப் பார்த்து, 'கொஞ்சம் இவனைக் காண்டீனுக்கு அழைச்சுண்டு போய் சாப்பிடவை' என்றார். நான் உடனே எழுந்தேன்.



Scanned with CamScanner

அவன் 'வேண்டாங்க. நான் போய்ச் சாப்பிடறேங்க. நான் போய்ச் சாப்பிடறேங்க' என்றான். பிறகு மீண்டும் எங்களுக்குக் கும்பிடு போட்டு விட்டு வெளியே போனான்.

நாங்கள் சிறிது நேரம் பேசாமல் இருந்தோம். சர்மா அவரையறியாமல் சிறிது உரக்கப் பேசிக் கொண்டார்.

'இவனுக்கு என்ன பண்ணறது? இங்கே இப்போ எடுக்கறது ராஜா ராணிக் கதைன்னா?'

ஆனால் அவர் வெறுமனே இருந்து விடவில்லை. இருவாரங்கள் கழித்து மீண்டும் கதை இலாகா கூடிய போது கதாநாயகன் புலி வேஷமணிந்து எதிரிக் கோட்டைக்குள் நுழைவதாகப் படமெடுக்கலாம் என்று சம்மதம் பெற்றுவிட்டார். புலியாட்டமாகக் காண்பிக்கும்போது கதாநாயகனுக்குப் பதில் காதர்டூப் செய்யலாம். அவனுக்கு ஒரு நூறு ரூபாயாவது வாங்கித் தரலாம்.

நான் காதருக்குக் கடிதம் போட்டேன். நான்கு நாட்களில் வழக்கம் போல அக்கடிதம் திரும்பி வந்தது. விலாசதாரர் இல்லையென்று.

சர்மா வெள்ளையை அழைத்துக் கொண்டு காதரைத் தேடினார். நாங்களும் எங்கெங்கோ விசாரித்துத் தேடினோம். கதாநாயகன் எதிரிக் கோட்டைக்குள் நுழையும் காட்சி எடுக்கப்பட வேண்டிய நாள் நெருங்கிக் கொண்டே வந்தது. காதர் கிடைக்கவில்லை.

அவன் கிடைத்திருந்தாலும் அதிகம் பயன் இருந்திருக்காது. ஒரு மாதத்திற்குள் வெளியான ஒரு படத்தில் கிராமிய சங்கீதத்துடன் அந்தக் கதாநாயகன் காவடி எடுப்பதாகக் காட்சி வந்திருந்தது. அந்தப் படம் தமிழ்நாடெல்லாம் தாங்கமுடியாத கூட்டத்தைக் கூட்டிக் கொண்டிருந்தது!

நாங்கள் எடுக்கும் படத்தில் கதாநாயகன் கரகம் எடுப்பதாகத் தீர்மானிக்கப்பட்டது.

* * *



# கலைஞன்

நீலபத்மநாபன்

இன்று எப்படியும் அவனிடம் பேசியே தீரவேண்டுமென்ற ஒருவித வைராக்கிய சித்தத்துடன் கூட்டத்திலிருந்து சற்று விலகி நின்று கொண்டிருந்தேன். உள்ளுக்குள் புகைமூட்டமாய் அவன்மீது கோபம்... புனிதமான கலையை இப்படி அநியாயமாய்...

பஸ் நிலையத்தில் வாகனங்களின் சந்தடி...

மனிதர்களின் சலசலவென்ற பேச்சரவம்...

வீதியின் எதிர்ப்பக்கமிருந்த விளம்பர ஏஜென்ஸி ஒளி பெருக்கியின் அலறல்.

மைதானத்திலிருந்து கேட்கும் தீப்பொறி பறக்கும் சொற்பொழிவோசை.

இந்தக் களேபரங்களின் இடையில், தெருப்புழுதி, சாக்கடை வாடை பகைப்புலனில் இந்த நாதஸ்வர இசை...

சென்ற வாரம் இந்த இசையை முதல் முறையாக இந்தச் சூழ்நிலையில் கேட்டபோது...

என்னால் நம்ப முடியவில்லை...

காதல் கேட்பது பொய்யா...?

கண்ணால் கண்டே தீருவது என்று உற்றுப் பார்த்தபோது...



Scanned with CamScanner

கடைகளின் நியான் விளக்கு வெளிச்சத்தில், வட்டமாய் நிற்கும் ஒரு கூட்டம்.

பஸ்ஸைப் பிடிக்க வந்தவர்கள்.

பஸ்ஸிலிருந்து இறங்கியவர்கள்.

மாலைப்பொழுதை பண விரையமில்லாது செலவழிக்காதவர்கள்.

இந்த மனிதக் கூட்டத்தின் மையத்திலிருந்து இந்த இனிய இசை...

ஆதி அந்தமில்லா ககனப் பெருவெளியிலிருந்து அடிமுடி தெரியாது சுருள் சுருளாய் எழும்பிவரும் இந்த நாத ரீங்காரம்...

இசையின் இழைகளில் மேலே மேலே சென்று கீழே வந்து, கீழே வந்து விலகத் தெரியாமல் விம்மித் தணியும், இன்னதென்று சொல்லத் தெரியாத இந்தச் சோக பாவம்...

ஆலய சந்நிதியிலோ, மங்கள முகூர்த்தம் நிகழும் இடங்களிலோ மட்டும் கேட்டுப் கேட்டுப் பழகிய இந்தப் புனித இசை இப்படியா இடம் மாறி, குரங்காட்டம், கண்கட்டு வித்தை காட்டிப் பணம் பண்ணும் சந்து முனையில் சாலையோரத்தில்...

மனசுக்குள் சொல்லத் தெரியாத ஊமை வலி...

அந்த வலியைச் சுமந்து கொண்டு அங்கே நிற்க முடியவில்லை. விறுவிறுவென்று நடந்து விட்டேன்.

முந்தாநாள் அவசரம் அவசரமாய் அக்காடமிக்கு நடக்கும்போது...

பஜாரில் ஒவ்வொரு கடை முன்னாலும் போய் நின்று இசையைப் பொழிந்து கைநீட்டி யாசகம் கேட்கும் கலைஞன்...





அடப்பாவி...!

க்ஷேத்திரங்களால், கலை உபாசகர்களால் போஷிக்கப்பட்ட உன்னதமான ஒரு கலை இப்படியா உன் மூலம் சந்தைக்கு இறங்கி வந்து சீரழிய வேண்டும்...?

இதற்கு முன் ஆர்மோனியப் பெட்டியைத் தூக்கிக் கொண்டே, தெருத்தெருவாய் நடந்து.. சாதகம் செய்த யாசகம் கேட்டவர்களைப் பார்த்திருக்கிறேன்... பாண்டும், டமாராவும் எல்லாம் அமர்க்களமாக இசைத்து வீட்டு நடைகளில் வந்து நின்று கௌரவப்பிச்சை வாங்கிச் செல்லும் அனாதை விடுதிச் சிறுவர்களைச் சந்தித்திருக்கிறேன்... அப்போதொன்றும் தோன்றாத இந்த உணர்வு வேதனை – இப்போது இந்த நாதஸ்வர இசையால் மட்டும் தோன்றக் காரணம்...?

என்னால் பொறுக்க முடியவில்லை; அங்கிருந்து தப்பித்துக் கொண்டு விறுவிறுவென்று நடந்து அகன்றபோதும், பஞ்சத்தில் அடிபட்ட அந்த நோஞ்சான் உடம்பு அழுக்கான வேஷ்டி, துண்டு இவையெல்லாவற்றையும் மீறி அந்தக் கலைஞனின் க்ஷவரம் செய்து பல நாளாய் விட்ட முகத்தில், விழிகளின் அடி ஆழத்தில் தொனித்த அந்தச் சோகம், என்னை என்னவோ செய்து கொண்டிருந்தது.

இப்படி சந்தைக்கடைக்கு கொண்டு வந்துவிட்டீர்களே! ஆனாலும் அவன் இசையில் பிசிறே இல்லையே... இப்படியொரு சுருதி சுத்தம் சாத்தியமா? அப்படியென்றால் கதைகளில் வருவதைப்போல இவனை யாரும் ஏன் இன்றுவரை தூக்கி விடவில்லை?

இன்று மறுபடியும் இந்த பஸ் நிலையத்தில் அதே இசை எப்படியும் இவனிடம் பேசிவிட வேண்டும்.

என்ன பேசுவது?



Scanned with CamScanner

அடேய் பழிகாரா... நீ மானபங்கப்படுத்துவது எவ்வளவு பெரிய கலையை என்பது உனக்குத் தெரியுமா?

- இப்படி அவனிடம் கேட்க வேண்டியதை மானசீகமாய் ஒத்திகை பார்த்துக் கொண்டிருக்கும் போது அந்தரங்கத்தில் ஒரு மின்வெட்டு.

என்னதான் ஆனாலும் இவன் எத்தனைக்கு பெரிய கலை உபாசகனாய் இருக்க வேண்டும்! இவ்வளவு இனிமையான இன்னிசையை தன்னகத்தில் ஆவகிக்க – குடியிருக்க எத்தனை காலம் இவன் சாதகம் – சாதனை செய்திருக்க வேண்டும். இந்தக் கலைக்கு ஏவல் புரிந்திருக்க வேண்டும்.

ஒரு பஸ் வந்து நின்றது... நெல்லிக்காய் மூட்டையாய் குறியோடும் கூட்டம்...

துண்டில் விழுந்திருந்த துட்டுக்களைப் பொறுக்கிச் சேர்த்துக் கொண்டிருக்கும் அவன்...

முன்பின் தெரியாத இவனிடம் இப்போது எப்படிப் பேச்சை ஆரம்பிப்பது?

கூச்சம்...

தயக்கம்...

வீதியில் சென்று கொண்டிருக்கும் தெரிந்த ஒரு சிலர் அவனை உற்றுப் பார்ப்பதுபோல்... அவன் இப்போது அடைத்து கிடக்கும் ஒரு கடை நடையில் போய் உட்கார்ந்து கொண்டிருப்பது தெரிகிறது... பக்கத்தில் இவன் இசைக் கவியும்...

மெல்ல அவன் பக்கத்தில் போய் உட்கார்ந்தேன்...

வியர்வை நெடியின் கூட அவனிடத்திலிருந்து லேசாய் வந்து கொண்டிருக்கும் சாராய வாடை...

அவன் ஒரு பீடியை பற்ற வைத்தான்...





"நமக்கு எந்த ஊரோ?"

அவன் திடுக்கிட்டு திரும்பிப் பார்த்தான்.

"தெங்காசிங்க... சார் யாருன்னு தெரியல்லியே...?"

"ஒரு வார காலமா உங்க சங்கீதத்தைக் கேட்டு மயங்கிக் கொண்டிருக்கும் ஒரு ரஸிகன்..."

"ரொம்ப சந்தோஷமுங்க..."

"உங்க கிட்டே ஒண்ணு கேக்கட்டுமா...? கோவிச்சுக்க மாட்டீங்களே...?"

"என்ன சார் இப்படிக் கேக்கிறீங்க! நான் அசலூருங்க. இங்கே இந்த ஊரே இன்னும் சரிவர பழகல்லே... அதுக்குள்ளே உங்ககிட்டே எதுக்கு சார் கோவிச்சுக்கணும்? சார் கேளுங்க..."

"ஒரு கணம் தயங்கிவிட்டு, நேரடியாகக் கேட்டேன்; .................. உயர்ந்த கலை உங்ககிட்டே இருக்குது. அதை .................?"

அவன் கையிலிருந்த பீடியை ஒரு தடவை நன்றாக இழுத்துவிட்டு எறிந்தான்.

"ஓஹோ... அதைக் கேக்கிறீங்களா...? சரக்கு மலிஞ்சா சந்தைக்கு வரவேண்டியதுதானே...?"

நான் ஒன்றும் சொல்லாமல் அவனையே பார்த்துக் கொண்டிருந்தேன்.

"எல்லா நாதஸ்வர வித்துவான்களைப் போலத்தான் சார் நானும் எத்தனை நாள் பாடுபட்டு சாதகம் செஞ்சதும் தான் இதைக் கத்துக்கிட்டேன். கோயிலில் அந்த எம்பெருமாள் சந்நிதியில் வாசிக்க சேவகம் செய்யும் வேலையும் கிடைச்சுது..."

"அப்புறம் என்ன?"



Scanned with CamScanner

"கோயிலில் திருட்டு நடந்தது. போலீஸ் வந்தது. விசாரணை ஆச்சு... கப்பலுக்குள்ளையே திருடன் இருந்தான்... கடைசியில் பூஜை நின்னு போச்சு... அப்புறம் கொஞ்ச நாள் கல்யாண வீடு, பிறகு கரக ஆட்டம், பொய்க்கால் குதிரை ஆட்டம், அவுங்க கூட நையாண்டி மேளம வாசிச்சுக்கிட்டு ஊரில் இருந்தேன்... சினிமா டிராம போல் அதுக்கெல்லாம் இப்போ பெரிய கிராக்கி இல்லை. இது மட்டுமில்லே, அங்கேயும் பெரிய போட்டி, பொறாமை... எவ்வளவு நாள் கலை, கண்ணியம், அப்படி, இப்படியெல்லாம் பாத்துகிட்டு ஊரிலேயே இருக்க முடியும்...? வயிறுன்னு ஒண்ணு இருக்கே சார்... பேசாம இந்த நாதஸ்வரத்தை எடுத்துக்கிட்டு ஊரைவிட்டு கிளம்பி விட்டேன்."

அவன் நிறுத்திவிட்டு இருமத் தொடங்கினான். விழிகள் பிதுங்கி வெளியில் வந்துவிடுவது போல்.

இப்போது விளம்பர ஏஜன்ஸி ஒலிபெருக்கியில் ஒரு நாதஸ்வர இசைமெட்டு...

"இதோ கேட்கிறீங்களல்லா... இது மட்டும் ... என்ன சார் இப்போ யார்தான் கலையை விற்கவில்லை . கௌரவமாக கச்சேரி செய்கிறவங்க, ஏன் கோயில்ல வாசிக்கிறவங்க, எல்லோரும் சும்மாவா செய்கிறாங்க, எல்லாருக்கும் அவுங்கவுங்க செய்யறதுதான் நியாயம். சாதிக்க ஒரு காரணம் இருக்கும். அப்படிப் பார்த்தா என்னை மட்டும் எப்படி சார் குறை சொல்லுவீங்க? சாப்பிடாமல் பட்டினி கிடப்பவனுக்கு கூழ் வேணும், சாப்பிட்டு வயிறு ரொம்பி இருப்பவனுக்கு ஸ்வீட் வேணும்... எல்லாம் விரலுக்கு ஏற்ற வீக்கம் சார்..."

மீண்டும் இருமல்...

விழிகளில் வந்து நிற்கும் நீர்த் துளிகள்...

"ஆமா சார்... இவ்வளவு தூரம் எங்கிட்டே கேக்கிறீங்களே. சாருக்கு என்ன வேலையோ?"





எனக்குள் ஒரு குற்றவாளி உணர்வு... 'மியூசிக் அக்காடமியில் நாதஸ்வரம் கற்றுக் கொடுக்கும் வேலை' அப்படீன்னு இவன்கிட்டெ எப்படி உண்மையைச் சொல்வேன்...

சொகுசாய் வாழ்வதாய் உலகை நம்பவைக்கப் பிரயத்தனப்படும் மத்தியதர வர்க்கத்தின் பிரதிநிதி நான் எங்கே? கீழே விழுந்து கிடக்கும் இவன் எங்கே?

'பக்கத்து ஸ்கூலில் வாத்தியார் வேலை...' என்கிறேன் பலகீனமான குரலில்.

* * *



Scanned with CamScanner

# ஆடிய கால்கள்

வண்ணநிலவன்

பழைய முனிசிபல் பள்ளிக்கூடத்தில் இரண்டாவது பீரியட் முடிந்து மணி அடித்துவிட்டது. இன்னும் ஒரு சவுக்கம் போட்டால் இந்தப் பெட்டி முடிந்துவிடும். பிறகு பெட்டியையும் சுளகுகளையும் எடுத்துக்கொண்டு மார்க்கெட்டுக்குப் போகவேண்டியதுதான்.

மேல வீட்டுப் பேராச்சிக் கிழவியைத் தவிர அந்த வளவில் உள்ள வீடுகளில் யாருமே இல்லை. எல்லோரும் வேலைக்குப் போய்விட்டார்கள். கிழவி தன் வீட்டுக்கு முன்னால் முற்றத்தில் கிடந்த அம்மியில் துவையல் அரைத்துக் கொண்டிருந்தாள். அரைக்கிற வேகத்தில் அம்மிக்கு இடியில் அண்டை கொடுத்திருந்த கல் விலகி விலகிப் போக, அம்மி ஆடியது. 'எழவெடுப்பான் அம்மியோட கெடந்து லோல்பட வேண்டியிருக்கே...' என்று முணுமுணுத்துக்கொண்டே அரைத்தாள்.

கழுகுமலையா வீட்டு வாசலில் அந்தக் கரும்பூனை, கால்களைப் பரக்க விரித்துப் போட்டுத் தூங்கிக் கொண்டிருந்தது. ஆற்றுப் பக்கமிருந்து வீசிய காற்றில், அதன் அடிவயிற்று முடி அவ்வப்போது சிலுப்பிக்கொண்டது. அடி பம்புக்குக் கீழே காரை பெயர்ந்து கிடந்த தளத்தில் தேங்கியிருந்த தண்ணீரை, ஒரு காக்கை தலையைச் சாய்த்துக் குடித்துக் கொண்டிருந்தது. ரஞ்சிதத்துடைய புருஷன் பாண்டி, வாசல் நிலைப்படியில் கல் சிலை மாதிரி ஆடாமல் அசையாமல் உட்கார்ந்துகொண்டு அவள் பெட்டி முடைகிறதையே பார்த்துக் கொண்டிருந்தான்.





பிறகு, 'ஏளா...! என்ன பதிலே சொல்லாமே நீ பாட்டுக்கு இருக்கே...?' என்று கேட்டான்.

அவளுக்கு வந்த கோபம் இன்னமட்டும் என்றில்லை. கண்கள் அகல விரிந்தன. கோபத்தில் முகமே பெரிதான மாதிரி இருந்தது. அசப்பில் சாவித்திரி மாதிரியே இருந்தாள். அவள் ரிக்கார்டு டான்ஸ் ஆடிவந்த காலத்தில் 'சாவித்திரியின் எதிரொலி ரஞ்சிதம்' என்றுதான் போஸ்டர் போடுவார்கள்.

'எனக்கு வாற கோவத்துக்கு அப்படியே அந்தா கெடக்கச் செங்காமட்டையை எடுத்து வீசிருவேன். ஏங்கிட்டச் செப்புக் காசுகூடக் கெடையாது. மார்க்கெட்டுக்குப் போயி இதுகளப் போட்டுட்டு வந்தாத்தான் துட்டைப் பாக்கலாம்... எப்பம் பார்த்தாலும் துட்டு துட்டுன்னு பஞ்சரிச்சா, இங்க என்ன துட்டு அடிக்க மிசினா இருக்கு...?

பேராச்சிக் கிழவி அரைப்பதை நிறுத்திவிட்டு அவர்களை ஏறிட்டுப் பார்த்தாள்.

'மார்க்கெட்டுக்குப் போவதுக்கு துட்டு வச்சிருக்காமயா இருப்பே...'

'பஸ் சார்ஜுக்கு வச்சிருக்கிறதை எடுத்து ஒம்மகிட்டக் குடுத்திட்டு நான் கழுதமேல ஏறியா போவேன்...?'

'ஒரு வாரமா ஆளைக் காணலை காணலைன்னு தெருவோட பொலம்பிக்கிட்டுத் திரிஞ்சே. இப்பம் வீட்டுக்கு வந்த புள்ளய எதுக்குளா இப்பிடித் திட்டுதே...?' என்று கேட்டாள் கிழவி.

'இவ்வளவு உருத்தாப் பேசுத. நீதான் பச்சை நோட்டை எடுத்துக் குடேன்...' என்று பதிலடி கொடுத்தாள் ரஞ்சிதம். அதற்குமேல் பேராச்சிக் கிழவி பேசவில்லை. காது கேளாத மாதிரி அரைத்துக் கொண்டிருந்தாள். திடீரென்று பாண்டி எழுந்து



Scanned with CamScanner

நின்றான். அவள் முடைந்து வைத்திருந்த சுளகுகளை எடுத்துத் தூங்கிக் கொண்டிருந்த பூனையின் மீது வீசினான். பூனை பதறி அடித்து எழுந்து கத்திக்கொண்டே ஓடிவிட்டது. பாண்டி தெருவைப் பார்த்து வேகமாக நடந்தான். அவன் நடந்தபோது தரை 'திண்திண்' என்று அதிர்ந்தது. ரஞ்சிதம் பக்கத்தில் கிடந்த செங்கல் துண்டை எடுத்து அவன் மேல் எறிந்தாள். அது அவன் கரண்டைக் காலில் பட்டது. தெருவில் இறங்கி ஓடினான். எங்கோ நின்று பூனை இன்னும் கத்திக் கொண்டிருந்தது. பேராச்சிக் கிழவி ஒன்றுமே நடக்காத மாதிரி அரைப்பதை நிறுத்திவிட்டு, துவையலை வாயில் போட்டு உப்புப் பார்த்தாள்.

அம்மன் கோவிலில் நேற்றே கொடை முடிந்துவிட்டது. தெருவெல்லாம் வாடிய பூக்களும் விளம்பர நோட்டீஸ் தாள்களுமாகக் கிடந்தன. இரண்டு நாள் கொடைக்குப் பிறகு தெருவே சோர்ந்து போயிருந்தது. கொடை பார்த்த அலுப்பில், தூக்கச் சடவுடன் கிட்ணக் கோனார் விறகு வண்டியை இழுத்துக் கொண்டு போனார். பன்னீர், சந்தன வாசனை மட்டும் இன்னும் கோவிலை விட்டுப் போகவில்லை. அந்தக் கலவையான மணம் மனதைக் கிறங்கடித்தது. முன் மண்டபத்தில் இரண்டு மூன்று பேர் விடிந்ததுகூடத் தெரியாமல் தூங்கிக் கொண்டிருந்தார்கள். அர்ச்சனை டிக்கெட் விற்கிற கவுண்டருக்குப் பக்கத்தில் கல்தூணில் சாய்ந்து உட்கார்ந்துகொண்டு ஈரத்தலையை உலர்த்திக் கொண்டிருந்தார் பூசாரி. மூலஸ்தானத்தில் சரவிளக்குச் சுடர் அசையாமல் எரிந்துகொண்டிருந்தது.

தெருவை அடைத்துப் பந்தல் போட்டிருந்தது. பந்தல் கால்களில் உரித்த மட்டைகளுடன் வாழை மரங்கள் நின்று கொண்டிருந்தன. கோவில் மதில் சுவரை ஒட்டிக் கச்சேரிக்காகப் போட்டிருந்த மேடைக்கு முன்னால் சிறுகும்பல் நின்று கொண்டிருந்தது. மேடையில், 'சினிமா புகழ் சிதம்பரம்' வளைந்து வளைந்து ஆடிக் கொண்டிருந்தான். கீழே நின்றிருந்த சின்னப்





பையன்கள் கைதட்டிக் குதித்துக் கொண்டிருந்தார்கள். ஒரே விசில் சத்தம்.

சோகையினால் சிதம்பரத்துடைய உடம்பே மஞ்சள் மசேளென்றிருந்தது. அவன் கட்டியிருந்த வேட்டியில் தீ வைத்தால்கூட நெருப்புப் பற்றாது. அவ்வளவு அழுக்கு. மேலே போட்டிருந்த சட்டையில் கையே இல்லை. முண்டா பனியன் மாதிரி இருந்தது. இரண்டு கால்களிலும் முட்டுக்குக் கீழே மீன் செதில்கள் போல் வங்கு, படைபடையாய் அப்பியிருந்தது. விரலால் சொறிந்த வெள்ளைக்கோடுகள் மேலும் கீழுமாய் ஓடியிருந்தன.

அதே அம்மன்கோவில் கொடையில் ஒரு காலத்தில் அவனும் ரஞ்சிதமும் எட்டு எட்டரை மணிக்கு ஆட ஆரம்பிக்கிற டான்ஸ்,. செகண்ட் ஷோ விடுகிறவரை நடக்கும். அந்தத் தெரு வழியாகத்தான் குறுக்குத்துறை டவுன் பஸ் போக வேண்டும். அந்தக் கூட்டத்துக்குள் பஸ்ஸை ஓட்டுவதற்குள் டிரைவர் ஞானமுத்துவுக்குப் போதும்போதும் என்றாகிவிடும். பஸ் மேடையைக் கடக்கும்போது ஞானமுத்து, 'என்னண்ணே, இப்படி பஸ்ஸைப் போகவிடாமப் பண்ணிட்டியளே?' என்று மேடையில் ஆடிக்கொண்டிருக்கும் சிதம்பரத்தைப் பார்த்துப் பொய்யாகக் கோபித்துக் கொள்வான்.

'அட ஞானமுத்தா? வருசத்துல ஒரு நாள் பாடு... சனங்க சந்தோஷமா இருந்துட்டுப் போகட்டும் மச்சினப்பிள்ளே...! என்று ஆடிக்கொண்டே இரைந்து செல்வான்.

அந்த சுற்று வட்டாரத்தில் ராமையன் பட்டிப் பையன் ஒருத்தன்தான் அவனுக்குப் போட்டியாக ரிக்கார்டு டான்ஸ் ஆட ஆரம்பித்தான். பிறகு மடமடவென்று நாலைந்து வருஷத்தில் பல கோஷ்டிகள் ஆட ஆரம்பித்தன. சினிமாப் புகழ் சிதம்பரத்துக்கு இருந்த செல்வாக்கு கொஞ்சம் கொஞ்சமாகக் குறைய



Scanned with CamScanner

ஆரம்பித்தது. ஒரு கட்டத்தில் ரஞ்சிதத்தைத் தங்களுடன் வந்து ஆடும்படி புதுக்கோஷ்டிகள் கூப்பிட்டன. ரஞ்சிதம் ஆடுவதை நிறுத்திவிட்டு புருஷனோடு நார்ப்பெட்டி முடையத் தொடங்கிவிட்டாள்.

சிதம்பரத்துக்கு வருமானம் குறையத் தொடங்கியதும், அவன் பொஞ்சாதி செல்வி, தன் தகப்பன் வீட்டுக்குக் கருத்தப்புலியூருக்குப் போய்விட்டாள். ரஞ்சிதத்தையே கல்யாணம் செய்து கொண்டிருந்தால் எவ்வளவோ நன்றாக இருந்திருக்கலாம்.

தன் வயிற்றைக் கழுவுவதே பெரும்பாடு ஆகிவிட்டது. யாரும் அவனை வேலைக்கு வைத்துக்கொள்வதாக இல்லை. 'ஏ, நீ பெரிய ஆட்டக்காரன்டே...! ஒன்னை வச்சு வேல வாங்குனா ஊருல என்னைத்தான் ஒரு மாதிரியா நெனைப்பாங்க...' என்று சொல்லிச் சொல்லியே அவனைப் பிச்சை எடுக்கும் நிலைக்குத் தள்ளிவிட்டார்கள்.

ஹோட்டலில் தண்ணீர் எடுத்துவிட்டான். கல்யாண மண்டபங்களில் எச்சில் இலை எடுத்துப்போட்டான். டாக்ஸி ஸ்டாண்டில் கார் கழுவிவிட்டான். ஜங்ஷன் ஸ்டேஷனில்தான் படுக்கை.

விடலைப் பையன்கள் விசில் அடித்தார்கள். அவனைக் கிண்டல் செய்தார்கள். 'நல்லா ஆடுனாத்தான் துட்டு... ஆமா, அதை ஞாபகம் வச்சுக்கோ...' என்றான் ஒரு பையன்.

'பிள்ளைவாள் கடையில இட்லி சாப்புடணுமா, சாப்பிடாண்டாமா? இட்லி வேணும்னா நல்லா ஆடு!'

'சினிமாப் புகழ் செதம்பரம்கிறதை மறந்துராத... அந்தப் பேருக்குத் தகுந்தாப்புல ஆடுடே!'





'ஹைரோ ஹைரோ ஹைரோப்பா... ஹைரோ ஹைரோ ஹைரோப்பா...' என்று மேடைக்குக் கீழே நின்ற பையன்கள் புதுப்பாட்டுப் பாட ஆரம்பித்தார்கள். சிதம்பரம் மூச்சு இரைக்க ஆடிக்கொண்டிருந்தான். அவனுடைய அழுக்கு வேட்டி காற்றில் உப்பிக் குடை பிடித்தது.

'திடீரென்று ஆடுவதை நிறுத்தினான். 'அண்ணாச்சி! எத்தனை பாட்டுக்கு நான் ஆடியாச்சு? ஒரு டீ வாங்கிக் குடுத்தீங்கன்னா கொஞ்சம் சொரத்தோட ஆடலாம்...' என்று கீழே நின்று கொண்டிருந்த புரோக்கர் சண்முகசுந்தரத்திடம் கேட்டான்.

'மருமகப்பிள்ளை...! டீ என்னடே டீ...? அதான் பிள்ளைவாள் கடையில இட்லி வாங்கித் தாரேன்னு சொல்லியிருக்கேம்லா...? நீ ஆடு மருமகனே...' என்றார்.

'ஏலேய்! இந்தக் காலத்துப் பாட்டுகளைப் பாடாதீங்கடா... அந்தக் காலத்துப் பழைய பாட்டுக்களப் பாடுங்கடா...' என்று சொன்னார் அரிசிக்கடை பனாதானா.

'மாமா...! ஒங்களுக்கு என் ஆட்டத்தைப் பத்தித் தெரியுது... அந்தச் சின்ன கழுதைகளுக்கு என்ன தெரியும் மாமா? ஒரு டீக்கி ஆர்டர் பண்ணுங்க மாமா... அதைக் குடிச்சிட்டு எப்பிடி ஆடுதம்னு நீங்களே பாருங்க...'

'டீதானே மாப்ளே? இந்தாச் சொல்லி அனுப்புனாப் போவுது... ஏய், அசன்பாய் கடையில் போய் ஒருத்தன் டீ வாங்கிட்டு வாங்கடா...' என்று உத்தரவு போட்டார் பனாதானா. அவருக்கு அவனைப் பார்க்கவே பாவமாக இருந்தது.

'மாமா ... மாமா... ஏம்மா... ஏம்மா...' என்று அவனே பாடிக்கொண்டு மேடையைச் சுற்றி சுற்றி வந்து ஆடினான்.



Scanned with CamScanner

முடைந்த நார்ப்பெட்டியையும் சுளகுகளையும் எடுத்துக் கொண்டு டவுனுக்கு பஸ் ஏறுவதற்காக வந்து கொண்டிருந்தாள் ரஞ்சிதம். வழியெல்லாம் புருஷனைப் பற்றியே நினைத்து வருத்தப்பட்டுக் கொண்டு வந்து கொண்டிருந்தாள். கோயிலை நெருங்க நெருங்க விசில் சத்தமும் கூச்சலும் அதிகமாகக் கேட்டது. கோயில் வாசலில் நின்று கண்களை மூடி சாமி கும்பிட்டாள். கோயிலுக்கு உள்ளிருந்து குளிர்ந்த காற்று வீசியது. அப்படியே அம்மன் சன்னதியிலேயே உட்கார்ந்துவிடலாம் போலிருந்தது. பந்தலுக்கு உள்ளிருந்து வந்த கூச்சலும் கூப்பாடும் அவளை அங்கே நிற்கவிடவில்லை.

மேடைப் பக்கம் வந்தாள் ரஞ்சிதம். வெறிபிடித்தவனைப் போல அழுக்குக் கந்தலுடன் சிதம்பரம் ஆடிக் கொண்டிருந்தான். அவனை அந்த நிலையில் பார்த்ததும் அவளுக்குக் கண் கலங்கி விட்டது. அவளால் பொறுக்க முடியவில்லை. கோபத்தோடு மேடைக்கு முன்னால் போய் நின்றாள். பையன்களைச் சத்தம் போட்டு விரட்டினாள். சிதம்பரத்தை மேடையை விட்டுக் கீழே இறங்கச் சொன்னாள்.

பனாதானாவைப் பார்த்து, 'அய்யா, நீங்களுமா இந்தப் பயலுக கூடச் சேர்ந்துட்டியோ...?' என்றாள்.

'தப்பா எடுத்துக்கிடாதே ரஞ்சிதம்... கொஞ்ச நேரங்கழிச்சு அவனைக் கீழே எறங்கச் சொல்லி மெல்லக் கூட்டிக்கிட்டுத் தாரப் போயிருவோம்னு நெனைச்சுக்கிட்டுத் தான் இருந்தேன். அதுக்குள்ள நீ வந்திட்டே...'

'ஏ செதம்பரம், ஒங் கூட்டாளி ரஞ்சிதமே வந்திட்டா... பெறவு என்னடே...' என்று புரோக்கர் சண்முகசுந்தரம் கேலி செய்தான். பனாதானாவுக்குக் கோபம் வந்துவிட்டது.

'கிண்டலா பண்ணுதே? மரியாதி கெட்டுப் போயிரும்டா... நீயும் ஒரு காலத்துல இதே மேடையில அவன்





ஆடுறதை வாயப் பொளந்துகிட்டுப் பார்த்தவந்தானலே? இன்னைக்கு அவன் கீழே எறங்கிட்டான்னதும் எகத்தாளமா பேசுதே? மருவாதியா இங்கிருந்து போயிரு...' என்று கத்தினார். பையன்களை விரட்டினார். அசன் பாய் கடைப் பையன் சாயா கொண்டு வந்தான். அதை வாங்கிச் சிதம்பரத்திடம் கொடுக்கப் போனார்.

'அந்த டீயை நீங்க குடிங்க... நான் இவரைக் கூட்டிட்டுப் போயி கௌப்புக் கடையில இட்லி வாங்கிக் குடுக்கேன்... வாங்க...' என்று சிதம்பரத்தைப் பார்த்துச் சொன்னாள் ரஞ்சிதம்.

* * *



Scanned with CamScanner

# காவடியாட்டம்

ஐூமா. வாஸுகி

கிராமத்தின் பிடறியைப் பிடித்து தன்னுள் அமிழ்த்திக் கொண்டிருந்தது வெயில். புழுதியால் தழுவிப்போனது அனைத்தையும் காற்று. தொழுவங்களில் மாடுகள் வெயிலை வெறித்து அசைபோடுதலை அவ்வப்போது தொடர்ந்தன. தொகுப்பாய்ப் பெண்கள் ஆற்றிலிருந்து நீர் கொண்டுவந்து தெருவை நனைத்தார்கள்.

துளியும் தேங்காமல் ஊற்ற ஊற்ற தெரு குடித்தது. கோடை வியர்வையிலும் நீரிலும் ஊறிப்போன அங்கங்களுடன் மீண்டும் பெண்கள் நீரெடுக்கப் போனார்கள். பேசிக் கொண்டார்கள். அவர்கள் சிரித்தது தூரத்தில் மேலக்காட்டுப் புதருக்குள் உட்கார்ந்திருந்தவனை எழுந்து நின்ற பார்க்கச் செய்தது.

மரங்கள் சகஜமாக திருடு போக ஆரம்பிக்காததற்கு முன்பு இன்னும் அடர்த்தியாயும் – பச்சை இருளோடுமிருந்தது மேலக்காடு. இரு பக்கமும் ஒரு மைல் விஸ்தீரணத்தில் மணல் கிடக்க நடுவில்தான் காவிரி. சில பகுதிகளில் ஆழத்துடன். யாரும் இன்று மீன் பிடிக்கவில்லை. தரைக்கும் மூன்றங்குல உயரத்தில் நீரோட்டத்தை ஊடறுத்து சூரியன் அற்புதங்கள் செய்தான். ஒரு சிறகு மிகச் சிறியது. அந்த ஒளி ஜாலத்தின்மீது மிதந்து போனது. ஆற்று மத்தியிலுள்ள ஈரத்திட்டுகளில் நாரைகள் யோசித்துக் கொண்டிருந்தன. எருமைகள் அதிரடியாய் ஆற்றுக்குள் விரட்டப்படவும் நாரைகள் பறந்து வெவ்வேறு இடங்களில் பிரிந்தமர்ந்தன. காய்ந்திருந்த சாணப்பற்றுகளில் வைக்கோலால்





தேய்க்கப்படும் சுகத்தில் ஒரு மாடு அண்ணாந்து மேகத்தைக் கூப்பிட்டது.

பெண்கள் குளித்துக் கொண்டிருந்தார்கள். பக்கத்தில் மாடு குளிப்பாட்டும் பையன்கள். ஒருவருக்கொருவர் முதுகு தேய்த்துவிடும்போது துணி நெகிழ்ந்து பிருஷ்டங்கள் வெளிப்பட்டன. மூழ்கி மாடுகளின் பின்னேயிருந்து தவித்துப் பார்த்தார்கள் பையன்கள்.

கோயில் பந்தலில் அலங்காரம் நடந்தது. மேசை போட்டு ஏறி நின்று கலர் பாட்டில் தோரணம் – பலாப்பழம் … ஈச்சங்கொத்து… வாழைமரம் கட்டிக் கொண்டிருந்தனர்.

வயலுக்குப் போகாத உற்சாகத்தில் கோயில் முன் கூட்டம். ஆண்கள் அசிங்கமாகத் திட்டிக்கொண்டு சிரித்தார்கள். வியர்வை வழிய சுருட்டும் பீடியும் புகைந்து கருகியது. வெற்றிலையை உள்ளங்கையில் வைத்து சிரத்தையுடன் நெறித்து உறவின் முறைகளை கிண்டல் பேசிக் கொண்டிருந்தவர்களும் உண்டு. அநேக இரவுகளில் சீட்டாடுவதற்கான ஒரு மறைப்பாகத்தான் கோயிலின் பின்பக்கச் சுவர் உதவியிருக்கிறது. சீட்டாட்டத்தில் தகராறு வந்து கைகலப்பான போனது பஞ்சாயத்தில் கண்டித்து கோயிலில் யாரும் சீட்டு விளையாடக் கூடாதென்று முடிவு செய்தார்கள். அதிகமாக இந்த இடத்தில் இப்போதெல்லாம் விளையாடப்படுவதில்லை.

கோயில் முன்னே ஈரத்தெரு புழுதியடங்கிக் கிடந்தது. மேளக்காரனும் வந்தாயிற்று. ஸ்பீக்கர் கட்டி முடித்த பிறகு கேப்டன் பிரபாகரன் பாட்டு போடச் சொல்லி கிராமத்தார் வற்புறுத்தியபோது சவுண்ட் சர்வீஸ்காரன் இல்லையென்று மறுத்து வேறொன்றைப் போட்டான். கரையோர மேலக்காடு அதை வாங்கி முணுமுணுத்தது. கிராமத்தின் நான்குத் தெரு மக்களையும் மேளம் கோயிலுக்கு இழுத்து வந்தது. அதன் ஓங்காரத்தில் மாடுகள் விதிர்த்தெழுந்து குரலெழுப்பின.



Scanned with CamScanner

மேளத்தையும் பாட்டையும் ஒருவன் நிறுத்திவிட்டு 'மைக்'கைப் பிடித்து அறிவிப்புச் செய்தான். தன் குரல் ஸ்பீக்கரில் பெரிதாய் ஒலித்ததில் அதிர்ச்சியாகி, விஷயத்தை மறந்து திக்கினான். சுற்றியிருந்தவர்கள் சிரித்ததும் விலகிக் கொண்டான்.

ஊருக்கப்பால் ஆற்று மணலின் கொதிப்பில் கால் பாவமாட்டாது அவசரமாய் ஓடிவந்து நீரில் விழுந்தார்கள். காவடிகள் சீரமைக்கப்பட்டன. அனைத்தும் ஒரே விதமான – அளவான காவடிகள். மூங்கில் வளைவும் மரக்கட்டையால் நடுப்பிடிப்பும் கொண்டது. இது தவிர இரண்டு அலகுக்காவடிகள் ஆயத்தமாகிக் கொண்டிருந்தன. குளித்துக் கரையேறிய பெண்கள் ஒதுங்கியிருந்து வேடிக்கை பார்த்தார்கள். குருத்தோலையும் – வண்ணக் காகிதங்களுமான அலங்காரம். விபூதிப் பட்டை, சந்தன குங்குமப் பொட்டு எல்லாமும் கரையோர நீர் பூவிதழ் மணத்தோடு போயிற்று. மீன்கள் கொத்த, மிதந்த இதழ்கள் அலுங்கின. மேளக்காரனும் பார்த்துக் கொண்டிருந்தான். தடுமன் கழுவி ஓரத்தில் வைக்கப்பட்டது. முருகனுக்காக எல்லோரும் குளித்தார்கள். துவைக்கும் கல்லைச் சுற்றி சந்தனத்துளிகள். நரைத்த தாடிக்கிழவரின் இயக்கத்தில் எல்லோரும் அவர் சொல்றபடி செய்தனர். அவர் இருபது வருடங்கள் சபரிமலை போன சாமி.

ஆற்றங்கரையிலும் மேலக்காட்டிலும் மேச்சல் ஆடு மாடுகள் தலையைத் தூக்கி கூட்டத்தைப் பார்த்தன. இடையர்கள் வெயிலுக்காக நெற்றியில் கைவைத்து மறைத்து கவனித்தனர். ஆயிற்றுச் சடங்குகள் முடிந்தது.

முருகனுக்காக எல்லோரும் காவடிகளைச் சுமந்து நின்றனர். சாமி முருகன் பாட்டு பாடத் தொடங்கினார். தேய்ந்துபோன குரல் எழவே இல்லை. காவடிகள் சிரமத்தின் பேரில் அந்தப் பாட்டைக் கூர்ந்து கேட்டு இடையியே சொன்னது, 'அரோகரா'. மேளத்தைப் பார்த்து காவடிகளுள் ஒன்று





கொச்சையாகத் திட்ட சினந்து முழங்கியது மேளம். ஆற்றோரம் அணிவகுத்த கோரைப்புல் தொகுதியிலிருந்து கொக்குகள் குப்பென்று உயர்ந்தன. காவடிகள் அதனதன் போக்கில் அரோகராவை உதிர்த்துக் கொண்டு முன்னேறின. மணற்சூட்டைக் காட்டிக் கொள்ள வெற்றுக்கும் பிரியமில்லை. எல்லாக் காவடிகளும் அமர்த்தலான ஆட்டத்துடன் மெத்தனமாகத்தான் செல்ல நினைத்தன. மணலைக் கடந்து மேட்டில் ஏறும்வரை, ஓட்டமும் நடையுமான விரைதலைக் கட்டுப்படுத்த முடியவில்லை. முன்னே சாமி நடந்து போனார். எல்லாவற்றுக்கும் கடைசியில் அலகுக் காவடிகள் தயங்கித் தயங்கி வந்தன. இரு முனைகளிலும் கூர்மையுள்ள நீண்ட வேலை குறுக்கு வசமாய்ப் பிடித்துக் கொண்டு நடந்தன. வேல் கன்னங்களைத் துளைத்துக் கொண்டு நீண்டிருந்தது. நாக்கின் மத்தியிலும் சிறிய வேல். உடல் முழுதும் தோலைத் துளைத்து கட்டித் தொங்கவிடப்பட்ட சிறிய வேல்கள் நடக்கும் போது பெண்டுலம் போல ஆடின. காவடிகள் மேட்டைக் கடந்து ஊருக்குள் இறங்கின.

அரோகரா ஓசையும் மேளமும் உலுக்கிப் போட்டது கிராமத்தை. காவடிகள் வரும் வழியில் இரு ஓரங்களிலும் ஜனங்கள். அலகுக் காவடிகளிடம் உணர்ச்சி வசப்பட்டு அரோகரித்தனர். தலைகளுக்கு மேலாக சேவிக்கின்ற கைகள். பார்த்துக் கொண்டிருந்த ஒருவருக்கு சாமி வந்து, ஆடத் தொடங்கியவுடன் அவர் தலையில் குடத்து நீர் சாய்க்கப்பட்டது. அவர் புருவத்தை அழுத்தித் துடைத்துக் கொண்டு பிரமையிலாழ்ந்து நின்றார். நரம்புகள் போல நீர் வடிந்து ஒழுகியது.

எல்லாக் காவடிகளின் கால்களிலும் ஜனங்கள் நீர் சொரிந்து, உடல் மண்ணில் பதிய விழுந்து வணங்கினார்கள். காவடிகள் ஆடிக்கொண்டு நகர்ந்தன. தோன்றிய விதத்தில் ஆட்டம், முன்னே ஒரு மனிதன் தடுமனை முதுகில் வைத்துக்

கொண்டு உடம்பை கம்பீரமாய் அசைத்து நடந்தான். கூர்மையுள்ள வேல்கள் இரண்டை சாலையின் குறுக்கில் அலகுக் காவடிகள் சுமந்து வருகின்ற படியால் சிலர் கவனமாக வழி ஒதுக்கிவிட்டு ஜனங்களை நெருங்கவிடாமல் பார்த்துக் கொண்டனர். விடுகளில் இளம்பெண்கள் நின்றிருந்தார்கள். இளங்காவடிகளைப் பார்த்துக் கொண்டு. அவர்களின் பார்வை, இளங்காவடிகளை மேலும் மிகுதியான பக்தியில் ஆட வைத்தது. தரையெங்கும் பூக்கள் துவம்சம் செய்யப்பட்டு ஈர மண்ணில் பாதி புதைந்த பூக்கள். அறைந்து அறைந்து அழுது கொண்டிருந்தது மேளம். சூரியன் எல்லோரையும் வியர்வையில் அபிஷேகித்துப் பார்த்தான். கூட்டம் அதிகப்பட்டிருந்தது.

உக்கிரமான காவடியாட்டம். ஒரு காலைத் தூக்கி சுழன்று பிறகு ஒற்றைக் காலிலேயே தத்தித் தத்தித் திரும்பாமல் பின்னால் சென்று, வட்டமாய்ச் சுற்றி வந்து ஒரு காவடி ஆடியது அது எல்லா வருஷமும் இப்படித்தான் ஆடுமென்று சொல்லிக் கொண்டார்கள். அடிக்கடி காவடிகளின் பாதங்களை நீர் குடங்கள் முத்தமிட்டன. தடுமனைச் சுமந்து சென்றவன் அவனுடைய ஆட்டத்தை ஆடினான்.

காவடிகள் ஊரைச் சுற்றி வந்தபிறகு கோயிலின் முன்னே கூட்டமாய் ஆடின. பார்த்துக் கொண்டிருந்தவர்களிடமிருந்து அவ்வப்போது ஆட்கள் பிரிந்து ஆட்டத்தில் சேர்ந்து கொண்டார்கள். முருகன் பார்த்துக் கொண்டிருந்தான். கோயிலின் உள்ளே அலங்காரம் ஒன்றுமில்லை. இருண்ட சுவர்கள் சூழ எப்போதும் போலத்தான் முருகன் எண்ணைப் பிசுக்கோடு நின்றான். புதியது மாலையும் பட்டுத்துண்டும், குத்துவிளக்கு அணைந்து போய் மறுபடியும் ஏற்றப்படுவதற்காகக் காத்திருந்தது.

கண்களை இடுக்கிக் கொண்டு ஆசாகத்தைப் பார்த்தார்கள். நிறையப்பேர் மீது சாமி வந்தது. கள் குடித்து விட்டு ஆடுவதாய் கூட்டத்தில் முனகிக் கொண்டார்கள். ஆட்டத்தில் ஒரு





காவடியில் மஞ்சள் இடுப்புத் துணி தளர்ந்து விழ பக்கத்துக் காவடி சிரித்தது. ஒரு கையால் வேட்டியை முடிந்து கொண்டே கெட்ட வார்த்தை ஒன்றை சிரித்தவனுக்கு துப்பிவிட்டு உடனே ஒரு அரோகராவைப் போட்டது அந்தக் காவடி. அலகுக் காவடிகள் கடைசியில். சாமி முணுமுணுத்து வானத்தில் தேடினார். எல்லோரும் மேலே பார்த்தார்கள். வெறிச்சிட்டுக் கிடந்தது வானம். கண்கள் கூச பார்த்துக் கொண்டிருந்தார்கள். எந்த வீட்டுக் கூரையிலிருந்தாவது அல்லது அருகிலிருக்கின்ற மரங்களிலிருந்தாவது காக்கையோ குருவியோ எதிர்ப்பக்கம் பறந்து உட்காரும் போது... அவர்கள் திடீரென்று ஆனந்தித்து... பறந்தது பருந்து இல்லையென்று தெரிந்ததும் ஏமாற்றத்தில் பெருமூச்சானார்கள். எதிர்பார்த்தார்கள். கடந்த வருடங்கள்போல இந்த வருடமும் கிருஷ்ணப் பருந்து வானத்தில் காட்சி தந்து காவடிகள் கோயிலுக்குள் நுழைய அனுமதி கொடுத்துவிடுமென, தீவிரமாகக் காத்துக் கொண்டிருந்தார்கள்.

மிக உயரத்தில் ஒரு பறவை அரை வட்டமாய்ப் பறப்பதை எவனோ திடீரென்று கூவிச் சொன்னான். காவடிகள் ஆவேசங் கொண்டன. ஆட்டம் அசுரகதியில். 'முருகா' 'முருகா'வென்று கிராமம் அலறியழைத்தது அந்தப் பறவையை. தடுமன் வைத்துக் கொண்டிருந்தவன் தடார் தடாரென முதுகிலும் தலையிலும் அடித்துக் கொண்டான். கூக்குரலிட்டு மெய்சிலிர்த்துப் பார்த்தார்கள் மக்கள். தடுமனைப் பிடுங்கி அடித்துக் கொள்ள சிலர் பாய்ந்தார்கள். வலியவர்களிடத்தில் அகப்பட்டது தடுமன். தடுமன் எனும் இரும்புத் தடி கிடைக்கப்பெற்றவர்கள் முதுகிலும் – விலாவிலும் அடித்துக் கொண்டு – ஒரு சிலர் மயங்கி விழுந்தனர். விழுந்தவர்கள் அப்புறப்படுத்தப்பட்டார்கள். மண்டை உடைந்து ரத்தம் வழிகிற நிலையிலும் தன்னைத்தானே தாக்கிக் கொள்வதை ஒருவன் நிறுத்தாதிருந்தான். வெறியுடன் கை மாறிப் போய்க் கொண்டிருந்தது தடுமன். உடல் பதறி நடுங்க வானத்தைப் பார்த்தபடி அடித்துக் கொண்டே ஒருவன் சடாரென்று கீழே

புரியாமல் போயிற்று. ஒரு கிழவி பதட்டத்தில் புலம்பி வரிந்து கட்டிய தன் மகனின் கையைப் பிடித்து இழுக்க முயன்றாள். கோயில் வாசலின் கோலத்தின் மீது உடல்கள் கட்டிப்புரண்டன. அரிவாள் கொத்தி தொடையில் ரத்தம் கொப்பளிக்க ஒருவன் சாய்ந்தான். கதறலுடன் ஓடி வந்தாள் மனைவி. தூரத்தில் நின்று தெருநாய்கள் குரைத்துத் தீர்த்தன. தெரு ரத்தம் சுவைத்தது. ஓலத்தில் அதிர்ந்தது கிராமம். விலக்கிவிட நினைத்தவர்களை அச்சம் முடக்கிப்போட அவர்கள் வீட்டுத் திண்ணைகளில் நின்று பார்த்துக் கொண்டிருந்தார்கள். யாருடைய வேட்டியோ ஒன்று மண்ணோட சுருண்டு கிடந்தது. சுவாசம் இறைக்கத் தழுவிக் கொண்டு உருண்டு பந்தல் காலில் மோதவும் மேலே கட்டியிருந்த பலாப்பழம் அறுந்து எவர்மீதோ விழுந்தது. சவுண்ட் சர்வீஸ்காரன் ஸ்பீக்கர்களை அவிழ்த்து இறக்குவதிலும் – ஆம்ப்ளிபயரைக் காப்பாற்றுவதிலும் முனைப்பாயிருந்தான்.

ஒரு காவடி துணிந்து கும்பல் களேபரத்தின் இடைபுகுந்து கோயிலை நோக்கி தலைதெறிக்க ஓடியது. மற்ற காவடிகளும் அதைத் தொடர்ந்து ஓடின. அலகு காவடிகளுக்கு வழி ஒதுக்கிவிட ஆட்களில்லை. காவடிகளைப் பின்பற்றி அலகுக் காவடிகளும் விரைந்து முன்னேறியது. இரு பக்கத்திலும் துருத்திக் கொண்டிருந்த வேலுக்குப் பயந்து ஒதுங்கி நின்றவர்கள் அதிகம் பேரில்லை. நடுவில் நின்று மண்ணை அள்ளி வீசி கீச்சுக் குரலில் ஏதோ கத்திய உள்ளாடையோடிருந்தவனை அலகுக் காவடியின் ஒரு முனை வயிற்றில் குறுக்கு வசமாய் ரத்தக்கோடு இழுத்தது. மற்றொரு முனை பந்தல் வாயிலின் வாழைமரத்தில் சிக்கிக் கொள்ள மல்லாந்து விழுந்தது அலகுக் காவடி. இன்னொன்று சற்றுத் தெலைவிலேயே நின்று குழம்பியது.

மாலை, வெயில் மறைந்து மந்தமான வெளிச்சம் மிச்சம். கோயில் முன்னே ஒரு பக்கமாய்ச் சாய்ந்த பந்தலைச் சுற்றிலும் யாருமில்லை. மேலக்காட்டின் குளுமையையும் – மணத்தையும் சுமந்து காற்று ஊருக்குள் அலைந்தது. நீள வெறிச்சோடிக் கிடந்த





தெருவில் கோயிலின் எதிரே மண்ணோடு ரத்தச் சுவடு. பந்தல் தோரணம் அறுபட்டு தரையில் படர்ந்திருந்தது. கோடியில் தனக்குள்ளே தலையைப் புதைத்து நாயொன்று படுத்திருந்தது.

மேலே... கருநீல வானத்தின் மிக உயரத்தில் வட்டமிட்டு வட்டமிட்டு ஒரு பறவை. ஒவ்வொரு அகண்ட வட்டத்திலும் பூமிக்குப் பக்கமானபடி அது இறங்கிக் கொண்டிருந்தது. தெருவின் முதல் வீட்டு ஓட்டு முகப்பில் உட்கார்ந்து இறக்கையைப் படபடத்து அலகை ஓட்டில் உராய்ந்து கொண்டது. பிறகு சட்டென்று எழும்பி பந்தலின் முன்புறத்திலிருந்து துளைக்கின்ற பார்வையைச் சுற்றிலும் விரித்தது. சிற்று சரசரக்க மேலேயே கொஞ்சம் நடந்தது. அது கிருஷ்ணப் பருந்து.

ஆற்றுக்கும் அந்தப்பக்கம் மேலக்காட்டுத் திசையில் மரத்தின் நினைவுக்காகவோ - குஞ்சுகளின் நினைவுக்காகவோ பருந்து பறப்பட்டுப் போன பிற்பாடு நட்சத்திரங்களை அழைத்துக் கொண்டு இருட்டு வந்து கவிழ்ந்தது.

* * *



Scanned with CamScanner

# நிழல் பாவைகள்

சோ. தர்மன்

அந்த ஒற்றை மாட்டு வண்டி ஊருக்குள் நுழைந்து விட்டதற்கு அடையாளமாகச் சில மனிதர்களையும், கட்டடங்களையும் கடந்து போனது. கவலையுடன் அமர்ந்திருக்கும் தன் கணவன் லட்சுமணராவின் முகத்தையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தாள் ரத்னாபாய். வினாடிக்கு வினாடி பல அவதாரமெடுத்து ஜொலிக்கும், அழும், கர்ஜிக்கும், ஆனந்திக்கும், சவால்விடும், ஏமாற்றும் அந்த முகம் குராவிப்போய் வண்டியின் அசைவிற்குத் தக்கபடி ஆடிக் கொண்டிருந்தது. பத்து இருபது வருடங்களுக்கு முன்னர் ரத்னாபாய் பல நடவை இதே ஊருக்குத் தன் கணவருடன் வந்திருக்கிறாள்.

அப்போதெல்லாம் வண்டி ஊருக்குள் நுழைந்த உடனேயே ஊரே திரண்டு நின்று வரவேற்கும். ஊர் நாட்டாண்மையும், முக்கியஸ்தர்களும், வண்டியைச் சுற்றி நிற்க இளவட்டங்கள் ஒவ்வொரு பெட்டியாகப் போட்டிக் போட்டுக் கொண்டு இறக்கி வைப்பார்கள். அந்தப் பெட்டிகளுக்குள் லட்சுமணராவ் இந்த உலகத்தையே அடக்கி வைத்துக் கொண்டு வந்திருக்கிறார் என்பது அனைவருக்கும் தெரியும். ராமர், சீதை, லட்சுமணன், அனுமன், ராவணன், மாரீசன், ஜடாயு, வாலி அப்புறம் தர்மன், பீமன், அர்ச்சுனன், நகுலன், சகாதேவன், குந்தி, பாஞ்சாலி, துரியோதனன், கர்ணன், ஏகலைவன், கிருஷ்ணர், பீஷ்மர், துரோணாச்சாரியார், அரவான், அரக்கன், கீசகன், தாடகை, சூர்ப்பனகை அனைவரும் பெட்டிக்குள் தான் உறங்குகிறார்கள். நல்லதங்காளும் அவளுடைய பிள்ளைகளின் உயிர்குடித்த அந்தக் கிணறும் கூடப் பெட்டிக்குள்தான்.





வண்டி மேலக்களத்தில் வந்து நின்றது. சோகத்துடன் மெதுவாக இறங்கும் தன் கணவன் லட்சுமணராவை உற்றுப் பார்த்துக் கொண்டே வண்டிக்குள் தூங்கும் தன் மகன்களையும், மருமகளையும் தட்டி எழுப்பினாள் ரத்னாபாய். மாட்டைக் கொண்டுபோய்க் கட்டுவதற்காக இடம் தேடியலைந்து தன் மகன் கோபால்ராவைப் பார்த்துக் கொண்டே நின்றார் லட்சுமணராவ். வண்டியின் பக்கத்திற்கு யாருமே வராதது ரத்னாபாய்க்கும் லட்சுமணராவுக்கும் வருத்தமளித்திருக்க வேண்டும். வண்டிக்குள்ளிருந்து இறங்கி தன் மருமகளையும், மகள்களையும் கண்டவுடன் சில இளவட்டங்கள் நெருங்கி வந்து வேடிக்கை பார்த்தனர். கூடார வண்டியின் முதுகில் காளான்களைப் போல் தூங்கிக் கொண்டிருந்த நாலைந்து ஸ்பீக்கர் குழாய்களையும், இளம் பெண்களையும் மட்டுமே இளவட்டங்கள் உற்றுப் பார்த்துக் கொண்டு நின்றார்.

கூட்டத்தில் மெதுவாய்த் தலைகாட்டிய முத்துவீரன் தாத்தாவை அடையாளங்கண்டு கொண்டதில் லட்சுமணராவுக்குக் கஷ்டம் ஒன்றுமில்லை. நடமாடும், பறக்கும், நீந்தும் அத்தனை ஜீவராசிகளையும் தன் கண்கள் வழியே கிரகித்து விரல் வழியே மலரச் செய்யும் சூட்சும கலை கற்ற கலைஞனல்லவா லட்சுமணராவ். அன்றாடம் தான் பார்க்கும் ஆயிரக்கணக்கான பெண்களைக் கவனித்து, சூர்ப்பனகைக்கு ஏற்ற நடையை உள்வாங்கிக் கொண்டு தன் விரலசைவில் சுழலும் நிழலுருவப் பாவைக்கு ஏற்றி திரையில் பரவசப்படுத்தும் நவீன கம்பன் லட்சுமணராவ். பீமன் நடையும், அர்ச்சுனனின் ஆர்ப்பரிப்பும், கிருஷ்ணனின் சாந்தமும், பாஞ்சாலியின் ஆவேசமும், கர்ணனின் கர்ஜனையும், நந்தியின் வருத்தம் கலந்த பதட்டமும் லட்சுமணராவின் விரல் வழியே திரையில் அடையும் ரசனை அற்புதத்திலும் அற்புதம்.

ஊரைச்சுற்றிலும் மலைமலையாய் நிற்கும் படப்புகளையும், மரத்தடியில் கழுத்து மணியோசை எழும்ப



Scanned with CamScanner

அசைபோட்டுக் கொண்டு நிற்கும் மாடுகளையும் காணவில்லை. முத்துவீரன் தாத்தா தொழுவத்தில் எருமைகளுக்காக வைத்திருந்த இரண்டு கட்டு நாற்றுக்கூளத்தை கொண்டு வந்து கொடுத்தார். கூடார வண்டிக்கு அடியிடிலேயும், மரநிழல்களிலும் ஜாமான்களை இறக்கி வைத்துவிட்டு, தன்னுடைய பேத்திக்காகத் தொட்டில் கட்டிக் கொண்டிருந்தான் ரத்னபாய். இன்னும் இரண்டு மூன்று சிறுசுகள் வண்டிப் பக்கத்தில் விளையாடிக் கொண்டிருந்தன.

கால மாற்றங்கள் பற்றியும், ஊர்களின் இன்றைய நிலவரம் பற்றியும், தங்களுடைய நிராதரவான நிலை பற்றியும் பேசிக் கொண்டே குளித்துக் கொண்டிருந்தனர். முத்துவீரன் தாத்தாவும் லட்சுமணராவும், தன் மனதை உறுத்திக் கொண்டிருந்த கேள்வியைச் சமயம் பார்த்துக் கேட்டார் தாத்தா.

"ராவ், இன்னிக்கி என்ன கத நடத்தப் போறீரு."

"கதையா? கதையெல்லாம் மலையேறி எத்தனையோ வருஷமாச்சு."

"அப்புறம்..." ஆச்சரியமாய் கேட்டார் தாத்தா.

"ஆடலும், பாடலும்" சிரித்துக் கொண்டே சொன்னார் ராவ்.

"அப்படின்னா."

"சினிமாப்பாட்ட பாட விட்டு அதுக்கேத்த மாதிரி ஆம்பளையும் பொம்பளையும் சேர்ந்து ஆடுறது."

துண்டால் தன் முதுகில் அழுக்கு உருட்டிக் கொண்டிருந்த முத்துவீரன் தாத்தாவின் மேலெல்லாம் ஒரே நேரத்தில் ஆயிரம் தேள்கள் கொட்டியதைப்போல் சுரீரென்று தைத்தது ராவ் சொன்ன வார்த்தைகள். தாத்தா ராவ் முகத்தையே உற்றுப்பார்த்தார். ஒரே நேரத்தில் போர் வீரனாக, மானம் காக்கப்





போராடும் பெண்ணாக, வஞ்சிக்கப்பட்ட ஏகலைவனாக, தன் குருதி வடிய கவசக் குண்டலம் அறுக்கும் கர்ணனாக, போர் செய்ய உபதேசிக்கும் கிருஷ்ணனாக, பறவையாக, குரங்காக, யானையாக, குதிரையாக, அரக்கனாக, ரதமாக, நளின நடைப்பெண்ணாகப் பல்லுரு கொள்ளும் லட்சுமணராவின் வார்த்தைகளா இது? முத்துவீரன் தாத்தா ஆச்சரியமாய்ப் பார்த்தபடி பெருமூச்சுவிட்டார்.

சில வருஷங்களுக்கு முன்னால் ரத்னாபாயும், லட்சுமணராவும் தெய்வங்களைப் போல் வலம் வந்த ஊர்களில் இன்று ஏறிட்டுக் கூட பார்க்காமல் எட்ட நின்று வேடிக்கை பார்க்கும் மனிதர்கள்.

இதோ பாவைக்கூத்து வண்டி ஊருக்குள் நுழைகிறது. வண்டியைச் சுற்றிலும் ஊரே கூடி நிற்கிறது. முக்கியஸ்தர்களின் அறிமுகம். இரவு ஊர்க்கூட்டம். என்ன கதை படிக்க வைக்கலாம் என்ற விவாதம். வீட்டுக்கு இவ்வளவு வரிப்பணம் நிர்ணயம். கேலியோ கிண்டலோ செய்தால் தண்டனை ஆயிரம் ரூபாய் அபாரதம். எட்டுநாளோ பத்து நாளோ ராமாயணம் என்றால் ராமர் பட்டாபிஷேகம். மகாபாரதம் என்றால் வனவாசம் முடிய அன்று ஊரே திருவிழாக்கோலம். பக்கத்து ஊர்களிலிருந்து வந்து நிறைந்து கிடக்கும் வண்டிகள்.

ஊர்ப்பொதுவில் கொடுக்கும் வரிப்பணம் போக கோடி வேஷ்டி, சேலைகள், தானியங்கள், பயறு வகைகள், வத்தல், மல்லி என்று வண்டி நிறைந்துவிடும். பட்டாபிஷேகம் முடித்த மறுநாளே தன் விரலுக்குள் ஒளித்துக் கொண்டு வந்திருக்கும் மழையைப் பெய்ய வைப்பார் லட்சுமணராவ். பதினெட்டு நாள் குருக்ஷேத்திரப் போரையே தன் விரலுக்குள் ஒளித்து வைத்திருக்கும் ராவால் காற்றையும், மேகத்தையும் ஒளித்து வைத்திருக்க முடியாதா? மழை கொட்டோ கொட்டென்று கொட்ட சம்சாரிகள் சந்தோஷத்துடன் கும்பிட்டு வழியனுப்பி வைப்பார்கள்.



Scanned with CamScanner

கடந்த காலத்தையெல்லாம் ஒன்று கூட்டி தன் நெஞ்சுக்குள் வைத்துக் கொண்டு தொழுவத்தின் மூலையில் உட்கார்ந்து முகட்டு வளையையே பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருந்தர் முத்துவீரன் தாத்தா. இந்தப் பாவைக் கூற்றைப் போல் எத்தனை கூத்துக்கள வந்தன ஊர்தேடி.. அவர்களெல்லாம் எங்கே எப்படி ஏன் தொலைந்து போனார்கள். சாமக்கோடாங்கி, ராப்பிச்சை, பச்சை குத்துபவர்கள், காவடிப் பாட்டுக்காரர்கள், கிண்ணட்டிக்காரன், மரக்கால் ஆட்டம், மணியாட்டிக்காரன், பொழிப்பாட்டுக்காரன், அடக்கவுடளே இவர் களையெல்லாம் கால வெள்ளம் எங்கே கொண்டுபோய், எந்தக் கரையில் ஒதுக்கியது. எந்த நாகரீக சூறாவளியில் அடித்துச் செல்லப்பட்டார்கள். கால இழுவைக்குள் மறைந்து தன் சுயமுகம் இழந்து உருத்தெரியாமல் மாறிப்போனார்களா என்ன?

முத்துவீரன் தாத்தா துள்ளும் இளவட்டமாய், பொழிகளம் சுற்றி வரும் இருபது மாடுகள். பொழிப் பாட்டுக்காரன் வந்து களத்தில் நிற்கிறான். முத்துவீரன் தாத்தாவின் அப்பா கும்பிட்டு வரவேற்கிறார்.

தன் இஷ்ட தெய்வங்களை வணங்கிப் பாடிவிட்டு மாடுகளைப் பற்றிப் பாடுகிறான் பொழிப்பாட்டுக்காரன். கூட்டம் திரண்டு கூடி நிற்கிறது. பிணையலடிக்கும் ஒவ்வொரு மாட்டையும் பற்றி அதன் நிறம், சுழி, கள்ளப்பாய்ச்சல், சண்டி, ரத்தக்கண், சுண்டுவாதம், மொட்டைவால், ஒட்டுவால், மூழி, போர், மயிலை, செவலை, கழிச்சான், கடகாபல் ஒட்டை, குறுங்கால் என்று பலவித மாடுகள் – அதன் குணங்கள் சரம்சரமாக ராகம் தாளம் தவறாமல் வந்து கொண்டேயிருக்கிறது. கடேசியில் பாட்டை நிறுத்தியவன் இருபத் மாடுகளில் முதன் முதலில் பிணையல் கண்ணியில் பூட்டிய மாடு இந்த மாடுதான் என்று அடையாளம் காட்ட கூட்டம் ஆர்ப்பரிக்கிறது. தப்பாத குறி. மாடுகளின் கால்களுக்குள் என்ன மகசூல் பிணையாக





மிதிபடுகிறதோ அதில் மூன்று தரம் தன் இரு கைகளாலும் அள்ளிக் கொள்ளலாம். இதுதான் பாட்டுக்கான கூலி.

இதற்காகவே தைத்துக் கொண்டு வந்திருக்கும் அகன்ற நீண்ட சாக்குப்படுதாவை களத்தை ஒட்டி விரிக்கிறான். நீச்சலடிப்பவனைப் போல் பொழியின் மேல் குப்புறப் படுத்துக் கொண்டு தன் நெஞ்சுக்கு முன்னால் தவசங்களை கூட்டி வைத்துக் கொண்டு மலையைத் தூக்கிக் கொண்டு பறந்து செல்லும் அனுமனைப் போல் பாடிக் கொண்டே, ஆயிரம் கண்கள் பார்த்திருக்க அப்படியே துள்ளிப் போய் அவன் விரித்த சாக்கில் உட்கார்கிறது தானியம். மூன்று தரம் அள்ளி அம்பாரமாய் மூட்டை கட்டியவுடன் அடுத்த களம் போகிறான். மேளக் களத்திலிருந்து மிதந்து வந்த சினிமா பாட்டில் ஒலி முத்துவீரன் தாத்தாவை இந்த உலகத்தில் கொண்டு வந்து நிறுத்தியது. மெதுவாக நடந்து தெருவில் நின்று மேற்காமல் எட்டிப்பார்த்தார். நிறைய டியூட் லைட்டுக்கள் பிரகாசமாய் எரிந்து கொண்டிருந்தன. மேடையைச் சுற்றிலும் ரொம்பத் தூரத்திற்குத் துணியால் கோட்டைச் சுவர் மாதிரி தடுப்பு எழுப்பியிருந்தார்கள். எட்டி நின்று பார்த்தாலும் உள்ளே பார்க்க முடியாதபடி உயரமாய் இருந்தது தடுப்பு. சினிமாப் பாடல்களை ஒலிபரப்பிக் கொண்டே இடையிடையே அறிவிப்பு செய்தான் கோபால்ராவ்.

"அன்பார்ந்த ரஜினி, கமல், விஜயகாந்த், சரத்குமார், தனுஷ் ரசிகர்களே ... உங்களின் ரசனைக்கேற்ற பழைய புதிய பாடல்களைக் கொண்டு உங்களைக் கிறங்க வைக்கும் அழகிகளின் ஆட்டம் காணத் தவறாதீர்கள். சரியாக எட்டு மணிக்கு ஆட்டம் ஆரம்பமாகும். முதல் வகுப்பு இருபது ரூபா. இரண்டாம் வகுப்பு 10 ரூபா, மூன்றாம் வகுப்பு ஐந்தே ரூபாதான். இடையழகி, தொடையழகி, இடுப்பழகி, சிரிப்பழகி என்று அத்தனை அழகிகளும் உங்களை மகிழ்விக்கக் காத்திருக்கிறார்கள், இளஞ்சிட்டுக்கள் இன்பமொட்டுக்கள் உங்களை மகிழ்விக்க இன்னும் சற்று நேரத்தில்...



Scanned with CamScanner

முத்துவீரன் தாத்தாவும் முண்டியடித்துக் கொண்டு செல்லும் கூட்டத்துடன் நின்றார். லட்சுமணராவும், ரத்னாபாயும் டிக்கெட் கிழித்துக் கொண்டிருந்தார்கள். தாத்தா அவர்கள் இருவரையும் உற்றுப் பார்த்துப் பெருமூச்சு விட்டார்.

திரைக்குப்பின்னால் லட்சுமணராவ் பக்கத்தில் ரத்னாபாய். மலை போல் குவிந்து கிடக்கும் தோல் பாவைகள். கால்விரல்களிலும், கை விரல்களிலும் பல முனைகளிலிருந்தும் கயிறுகளால் இணைக்கப்பட்டிருக்கும் பாவைகள். கைகளைச் சுண்டி பாவைப் பொம்மைகளைத் திரையில் காட்டிக் கொண்டிருக்கும் போதே வசனம் பேசும் வாய். வாயசைவில் உதிர்ந்து வரும் வசனத்திற்கேற்ப பாவைகளின் உறுப்புகளைச் சுண்டியிழுத்து அசையச் செய்யும் ஆடச் செய்யும் கால் விரல்களின் லாவகம். ஒரே நேரத்தில் உடலின் அனைத்து உறுப்புகளும் லயம் தவறாமல் இயங்கி கத்தி, கதறி, ஆடி, பாடி, பறந்து, மறைந்து அந்த மாயாஜல நிழலுருவப் பாவைகளின் குவியல்களில் தங்களை மறந்து ரசித்து, சிரித்து, கைத்தட்டி, ஆரவாரித்து, ஆர்ப்பரித்தது.

குறிப்பிட்ட மணித்துளிக்குள் முடிக்க வேண்டிய இதய அறுவை சிகிச்சையில் அடுத்ததாக மருத்துவரின் கையில் என்ன ஆயுதம் இருக்க வேண்டுமோ அதை யூகித்துணர்ந்து எடுத்துக் கொடுக்கும் நிபுணனைப் போல் ரத்னாபாய், கதையோட்டத்தின் அடுத்தவரிக்கு என்ன பாவை வேண்டுமோ தயாராக ராவின் கைகளில் திணிக்க வேண்டும். வினாடி பிசகினாலும் கதையோட்டம் மாறி, உருவங்கள் பொருந்தாது. கர்ணனுடன் போர் செய்ய அர்ச்சுனன் ஆயத்தமானான் என்றவுடன், அர்ச்சுனனுக்குப் பதில் கிருஷ்ணன் போய்விட்டால், யுத்தம் கிருஷ்ணனுக்கும் கர்ணனுக்கும் நடந்தேறி விடுகிற அபாயமுண்டு. லட்சுமணராவின் கண்கள் வழியே செல்லும் தேவலோக பாஷைகள்தான், ரத்னாபாயைக் கச்சிதமாகப் பாவைகளை எடுத்துக் கொடுக்க உதவுகின்றன போலும்.





கொச்சைத்தனமான இரட்டை அர்த்த காம ரசப் பாடல்களுக்குக் கோபால்ராவும், அவனுடன் பிறந்த சகோதரிகளும் அரைகுறை ஆடைகளுடன் சேர்ந்து ஆடியதைப் பார்க்க சகிக்காதவராய் முத்துவீரன் தாத்தா வெளியே வந்தார். திரையுலக நிழலுருவப் பதுமைகளைத் [illegible] அந்தரங்க நாயகிகளாக வரித்துக் கொண்டு அமர்ந்திருந்த இளவட்டங்கள் உற்சாக மிகுதியால், ஒவ்வொரு பாடல் முடிந்தவுடன் கைதட்டி, விசிலடித்து, ஆர்ப்பரித்ததோடு மேடையேறி அன்பளிப்பாக ரூபாய் நோட்டுக்களைப் பெண்களின் மேலெல்லாம் குத்தி நிரப்பினார். அன்னிய ஆடவரின் கை ஸ்பரிசம் பழகிப் போய்விட்டதோ என்னவோ, எந்த இடத்தில் தொட்டாலும் முகம் சுளிக்காமல் ரூபாய் நோட்டுக்கள் குத்துவதற்கு தங்கள் உடலைக் காட்டிக் கொண்டு சிரித்தபடியே நின்று போஸ் கொடுத்தனர் பெண்கள். ஒவ்வொரு பாடலுக்கும் ஆடி முடிந்ததும் வியர்வை வழிய ஓடிவரும் தன் மகள்களுக்கும், மருமகளுக்கும் ஆடைகளை மாற்றிக் கொண்டிருந்தாள் ரத்னாபாய். திடீரென்று இன்னொரு அறிவிப்பை வெளியிட்டான் கோபால்ராவ்.

"டான்ஸ் ஆடத்தெரிந்த இளவட்டங்கள் மேடைக்கு வரலாமென்றும், ஒரு பாடலுக்கும் பெண்களுடன் சேர்ந்து ஆட இருபது ரூபாய் கட்டணமென்றும், அதேபோல் நல்ல சேலைகள் இருந்தால் பெண்கள் கொடுத்து உதவும்படியும் காலையில் திருப்பிக் கொடுத்து விடுவதாகவும் வேண்டுகோள் விட்டான்." இளைஞர்கள் பணம் கொடுத்து பெண்களுடன் ஆடுவதற்கு போட்டி போட்டனர். புதுப்புது டிசைனில் சேலைகள் குவிந்துவிட்டன. தன் சேலையைக் கட்டிக்கொண்டு ஆடிய பெண்கள் தனக்குப்பிடித்தவன் தொட்டு ஆடியதைத் தானே ஆடியதாக ரசித்து உட்கார்ந்திருந்தனர் பெண்கள். ஆடத்தெரியாமல் ஆசையில் மட்டும் மேடையேறிய உள்ளூர் இளைஞர்களை, வலுக்கட்டாயமாக பெண்கள் இழுத்து இழுத்து



Scanned with CamScanner

அணைத்து நெருங்கி ஆடியபோது கூட்டம் ஆர்ப்பரித்தது. தொழுவத்தில் வந்து படுத்த முத்துவீரன் தாத்தாவுக்கு உறக்கம் வரவில்லை. தொடர்ந்து கொச்சைத்தனமாக பாடல்களும் கூச்சலும் கும்மாளமும், விசில் சத்தங்களும் மிதந்து வந்து அவரை அலைக்கழிக்க எப்போது ஆட்டம் முடிந்தது... எப்போது தூங்கினோம் என்று தெரியாமலேயே தூங்கினார்.

காலையில் அவருக்கு லட்சுமணராவைப் பார்க்க வேண்டும் போலிருந்தது. மெதுவாக வந்து கூடாரத்தை எட்டிப்பார்த்தார். வேஷம் கலைக்காத பவுடர் பூச்சுக்கள்..... அலங்கோலத்துடன் பெண்கள் தாறுமாறாகப் படுத்துக்கிடந்தனர். வெளியே பந்தலுக்குள் சத்தங்கேட்கவே உற்றுப்பார்த்தார். லட்சுமணராவ் தன்னுடைய பேரக்குழந்தைகளுக்கு கதை சொல்லி விளையாட்டுக் காட்டிக் கொண்டிருந்தார். முத்துவீரன் தாத்தா மறைந்து நின்று கவனமாய் கேட்டார்.

ஒரு ஊரில் ஒரு பாட்டி இருந்தா, அந்த பாட்டி மரத்தடியில் உட்கார்ந்து வடை வித்துக்கிட்டிருந்தா, ஒரு காக்கா வேகமாக வந்து பாட்டியோட வடைய தூக்கிட்டு பறந்து போயி மரத்து மேல் உட்கார்ந்திருச்சி. பாட்டி கூப்பாடு போட்டு அழுதா. அப்போ அந்த வழியா ஒரு போலீஸ்காரர் வந்தாரு. பாட்டி அழுதுக்கிட்டே போயி போலீஸ்காரர்கிட்ட சொன்னா. போலீஸ்காரர் வேகமாகப் போயி மரத்தடியில் நின்று காக்காயப்பாத்து, "ஏய் காக்கா! ஒழுங்கா, மரியாதையா பாட்டியோட வடையைக் குடுத்துரு. இல்ல ஒன்னய இந்த துப்பாக்கியால சுட்டுப் பொசுக்கிடுவேன்"னு சொன்னாரு. அப்போ காக்கா சொல்லுச்சு, "ஒம்ம சோலியப் பாத்துட்டு பேசமா போரும், இது எனக்கும் பாட்டிக்கும் உள்ள விவகாரம்" அப்படின்னு சொல்லிட்டு வடையத் திங்கப் பார்த்துச்சு. ஒடனே போலீஸ்காரருக்கு கோபம் வந்து "ஒழுங்கா குடுக்கப் போறயா இல்ல சுடவா?"னு கேட்வும், காக்கா சொல்லிச்சு, "நம்ம ரெண்டு பேரும் ஆளுக்குப் பாதியா பங்கு வச்சிக்கிருவம்" அப்படின்னு





சொல்லி பாதி வடைய பிச்சு கீழே போட்டுருச்சு. ஒடனே போலீஸ்காரர் துப்பாக்கிய கீழவச்சுட்டு குனிஞ்சு வடைய எடுக்கப் போனாரு. அப்ப காக்கா விருட்னு பறந்துவந்து துப்பாக்கிய தூக்கிட்டுப் போயி உச்சி மரத்துல உக்கார்ந்துக்கிருச்சு. ஒடனே போலீஸ்காரர் "காக்கா ... காக்கா நாளைக்கு ஒனக்கு அஞ்சு வட வாங்கித்தாரன், என்னோட துப்பாக்கிய குடுத்திரு காக்கா"ன்னு கெஞ்சினாரு. காக்கா சொல்லிச்சு "நீ என்ன பெரிய அரிச்சந்திரனா ஒன்னய நம்ப மாட்டேன் போ"னு சொல்லிருச்சு. "சத்தியமா என்னய நம்பு காக்கா"ன்னு போலீஸ் சொன்னாரு. "சத்தியத்த நான் நம்பவே மாட்டேன். அதெல்லாம் அந்தக்காலம், ஒன்னோட துப்பாக்கி வேணும்னா; அஞ்சுவடைய ஒடனே இப்பவே வாங்கிட்டு வா, இல்லனா நடையக்கட்டு. டயத்த வேஸ்ட் பண்ணாத, எனக்கு நெறைய வேல இருக்கு எடத்த காலி பண்ணு" அப்பிடினு சொல்லிட்டு அடுத்த மரத்துல போயி ஜம்னு உக்கார்ந்துக்கிருச்சு.

முத்துவீரன் தாத்தா லட்சுணராவையே பார்த்துக் கொண்டு நின்றார். மரத்தடியில் வடைவிற்கும் பாட்டியாக பாஞ்சாலியை உட்கார வைத்திருந்தார். கீசகனைக் கொல்வதற்காக பீமன் பிடுங்கிய மரமே இப்போது வடை விற்கும் பாஞ்சாலிக்கு நிழல் தந்து கொண்டிருந்தது. வடையைத் திருடிக் கொண்டு ஓடிய காக்கையாக மரக்கொப்பில் ஜடாயு உட்கார்ந்திருந்தது. துப்பாக்கியைப் பறிகொடுத்த போலீஸ்காரனாக கிருஷ்ண பரமாத்மா. வடைகள் அடுக்கிய கூடையாக ஜடாயுவின் வெட்டுப்பட்டு வீழ்ந்த ஒற்றை இறக்கை.

ஒரு துயரப் பெருமூச்சுடன் முத்துவீரன் தாத்தா லட்சுமணராவைப் பார்க்காமலேயே திரும்பி நடந்தார். தூரத்தில் சீதையைத் தூக்கிச் சென்ற ராவணனின் தேரும், மாய மானும் தரையில் கிடந்தன. மூலைக் கொன்றாய் சிதறிக்கிடக்கும் தோல் பாவைகள் உபயோகமற்று விளையாட்டுப் பொருட்களாக சிதறிக் கிடந்த பாவை ஒன்று அவர் காலில் இடற குனிந்து எடுத்தார்.



Scanned with CamScanner

முள்படுக்கையில் பீஷ்மர். திடுக்கிட்டு கண்களில் ஒற்றிக் கொண்டு வணங்கிய முத்துவீரன் தாத்தாவின் விரல்களில் முள்குத்தி ரத்தம் வழிந்து கொண்டிருந்தது. தாத்தா லட்சுமணராவின் விரல்களை நினைத்தபடியே மெதுவாக நடந்தார். அவருக்கு பாஞ்சாலி கதறுவது போலவும், ராவணனின் தேருக்குள்ளிருந்து சீதை கத்துவது போலவும், கட்டைவிரல் இழந்த ஏகலைவன் கதறியழுவது போலவும் பல சத்தங்கள் கேட்டன.

நேற்று இரவு கட்டி ஆடுவதற்காக இரவல் கொடுத்த தங்கள் சேலைகளை குமரிப் பெண்கள் வாங்கிக் கொண்டு போனார்கள். முகர்ந்து கொண்டும், மார்போடு அணைத்துக் கொண்டும்.

* * *



# மதுரைக்கு வந்த ஒப்பனைக்காரன்

கோணங்கி

பட்டினியும் வறுமையும் பின்துரத்த
மவுண்ட் ரோட்டில் புதுமைப்பித்தன்
மதுரைத் தெருவில் ஒப்பனைகள் கலைத்தெறிந்த
ஜி. நாகராஜன்
நிரந்தரத் தற்கொலையில் வாழ்ந்துக்கொண்டிருக்கும்
ஆத்மாநாம்
இந்த விதிகளுக்கு அப்பால்
எழுதப்படாத சரித்திரத்தில்
அலைந்து கொண்டிருக்கிறான் ஒப்பனைக்காரன்.

சுண்ணாம்புக்காரத் தெருவில் நாடகக்காரி இருந்தாள்; கொழும்பு மலேயா வரை அவளோட புகழ் பரவியிருந்தது. அவளுக்கு ஒப்பனை செய்யும் யுவனொருவன். சாஸ்திரம், இசை, ஓவியம் பயின்றவன். பல நாடகங்களை பார்த்தான். கல்கத்தாவின் வீதிகளில் அவனைப் பற்றி பரவியது. பர்மா, மலேயாவுக்கு கம்பெனி சென்ற சமயம் அங்கும் பல நாடக குழுக்கள் தோன்றின.

மீண்டும் நாடகங்கள் எழுத வசனகர்த்தா எழுத்தாணியை தீட்டுகிறார். திறந்த ஏடுகளில் நாடகங்கள், பாடல்கள், சரித்திர முக்கியத்துவம் பெற்றன. மிருச்ச கடிகம் – வடமொழியிலிருந்து 18ஆம் நூற்றாண்டின் இறுதியில் தமிழாக்கம் செய்து அரங்கேறியது. நாடகாசிரியன் சூத்ரகன் எனும் அரசன் சிருஷ்டித்த பாத்திரங்கள், சூத்திரதாரன் – நடிகன் விதூஷகன் சாருதத்தன் வசந்தசேனை என்று யுவனின் ஒப்பனையில் இரவுகள் மெல்ல நகர்கின்றன. கம்பெனி கொடி கட்டியது.



Scanned with CamScanner

சந்திரமதி வேடம்பூண்டு லோகிதாசனை சுடுகாட்டுக்கு கொண்டு வருகிறாள். புத்திர சோகத்தில் சந்திரமதி, பிணந்தள்ளும் கோலுடன் அரிச்சந்திர மகராசன் எரிக்க பணம் கேட்டு வாதிடும் காட்சி.

குடிகார கோவிந்தன் விஸ்வாமித்ரன் முனிவராய் இரவில் வந்து நிற்கின்றான்.

சீலைகள் காற்றிலாடுகின்றன. பிணம் எரிகிறது. சடலங்கள் எழுந்து ஆட ஆட தீமூண்டு எரிக்கிறது பாடல். மயானகாண்டம் உச்சக்கட்டம்.

விடிவெள்ளி முளைத்து அரிச்சந்திர நாடகங்களுக்கு அருகே சரிந்து கொண்டிருந்தது. மேடைகளில் சரியும் நட்சத்திரங்களைப் பார்த்து வருகிறார்கள் ஒவ்வொரு காலமும்.

சந்திரமதியானவள் நாடகம் ஓய்ந்த வீதிகளில் பிச்சையெடுத்து வருகிறாள். மலார் ராகம் ஓய்ந்தது. கடல் கடந்த காலம் மறைந்தது. ஒப்பனைக்காரன் யுவம் இழந்தான். பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதியில் வளையத் துவங்கிய அவன் மூக்கு பெரிதாகி சுருண்டு கருத்துப் போனது.

பிச்சைக்கிழவியான பழைய நாடகக்காரியின் பிரேமையினால் கிழவன் பழைய யுவன் போல் ஒப்பனை கொண்டான். 'வீரன் திப்புசுல்தான்' நாடக ஒப்பனை. திப்புவின் பழுதான தொப்பி. தொப்பிக்கு அழகாக கோழி ரோமங்களை நட்டு குஞ்சம் அமைத்தான். வெள்ளி மீசையென்றாலும் திப்புவின் வீரம், துடிக்கும். வாய் திறந்தால் வசனம், வெள்ளைப் பரங்கியரை வாள் கொண்டு துண்டித்த வாய் வீச்சு.

சுய எள்ளலாய் கிழப்புன்னகை உதட்டின் ஓரங்களில் மீசையும் சேர்ந்து சிரிக்கும் கண்ணுக்கு அழகான கிழவனவன்.





ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு வேடம் தரித்து மதுரை வீதிகளில் தோன்றினான். உடைவாளை உருவியபடி வேகமாய் நடந்தான். நாடகச் சுவடிகள் சுமந்து செல்லும் ராவுத்தன் குதிரை, கம்பீர சுல்தான் நடை, அவன் வளைக்குள் புகுந்த பெருச்சாளிகளைப் பற்றி சிந்தைவயப்பட்டிருந்தான்.

பல ஒப்பனைகளில் பெருச்சாளிகள் வரும் இரவுகள்... சுவடிகளை கடத்திச்செல்லும் பழுதான துணிகள் ராஜாவின் சட்டை, மந்திரியார் வேஷ்டி, சீமான்கள் வேஷத்தில் பெருச்சாளிகள் நடமாட்டம். சேகரித்த பாடல்களைப் பாடும் பெருச்சாளிகள், பழமையில் மோகம், அதிநவீன பெருச்சாளிகள் சுவடிகளை கரைத்துக் குடித்தன.

பெருச்சாளி கடித்த வஸ்திரங்களை மூட்டித் தைப்பது ஊசி நூலின் வேலை. ஏடுகளைக் கொரிக்கும் நவீன பெருச்சாளிகளை நகரின் மேல் ஏவுகிறது. கிழவனின் மந்திரப் புல்லாங்குழல், நெடுங்காலம் அது. மதுரை நகரம். விளக்குகள் ஏற்றிய இரவு. கிழவன் தனிமையில் பாடுகிறான். மூப்படைந்த அவன் மூக்கு பாபகெனோ படைப்பில் வரும் பறவை மனிதனைப் பாடும். கோட்டை – நடனமண்டபம் – அரண்மனை இரவு – நதிக்கரை காட்சிகள் – நாடகத் தெரு ஸ்கிரீன்கள் எல்லாம் கிழிந்தன. அவன் பாடலில் வரும் யுவன் நகரங்களுக்கு மேல் பறந்து பார்க்கின்றான். இசைக்குழு கோரஸ் பாடுகிறது.

நூற்றாண்டுகள் அடுக்கி வைக்கப்பட்ட ஒப்பனைக்காரன் வீடு. திரைச்சீலைகளில் வரைந்த சித்திரங்கள். பாய்ஸ் கம்பெனி இசைக்குழுவின் போட்டோ, மீசை கிருதாவுடன் தோன்றும். பழைய நடிகர்கள், நாடகக்காரி ரங்கூனில் வைத்து எடுத்த படம். பழுதடைந்த யுவன் இவர்களுக்கு நடுவில் அமர்ந்திருந்தான். ஒப்பனைப் பொருட்கள் நிறைந்துள்ளன. நாடகம் போட அழைப்பு வருமென்று நப்பாசையில் கிழவன் காத்திருக்கிறான்.



Scanned with CamScanner

அதுவரைக்கும் எல்லா ஒப்பனைகளிலும் தன்னைப் பார்த்துக் கொண்டான். வெயில் கிளம்பும் வேளை நாடகத்திற்கு ஆயத்தம் நடக்கும். வசனங்கள் தலைகீழ் பாடம், பெரிய கஞ்சப்பிரபு வேடம் தரித்துக் கொண்டான். அதைக் கலைத்துவிட்டு சறறு ேநரம் ஓய்வு. பின் அடுத்த ஒப்பனை. புராணிக வணிகன் தோன்றினான்.

மதுரை நகருக்கு அதிசய வணிகன் வந்திருக்கிறான். நகருக்குள் பரபரப்பு.

கிழவனின் சின்ன குடிசை. மண் சுவர் பதித்த நிலைக் கண்ணாடி. கண்ணாடி முன் அதிசய வணிகன். பல தேசங்கள் கடந்து வருகிறான். வெளிநாட்டு மீசையை எடுத்து பெரிய மூக்கில் இணைத்து மூக்கால் பேச தொடங்குகிறான்.

வாத்தியக் கருவிகள், பின்னணி இசை முழங்க நகருக்குள் வணிகன். ஒவ்வொரு எட்டிலும் ஹார்மோனியத்தின் குரல் அதிகரிக்கிறது. ஏலம் விட வேண்டியவை மூட்டையாகி கட்டித்தூக்கிக் கொண்டு போகிறான். ஏலம் விடுவது வணிகன் தொழில். சீமானைப் போல் ஜரிகைக்கரை வேஷ்டி மின்னுகிறது. ஜனநடமாட்டம் அதிகமான பகுதிகளில் வணிகன் நடமாடுகிறான். தெருவில் போவோர் அவனைக் கடந்து செல்ல முடியாது. எதிரே முகவெட்டைப் பார்த்ததுமே சொல்லிவிடுவான் வருவது யாரென்று முற்பிறப்பைச் சொல்லும் வணிகளின் நிமித்தகம்.

தமிழன் மானம் காத்த புலவனைய்யா நீர் என்பான். இவர் தானய்யா குதிரைவீரன், தக்கணா இளவரசி சாந்த் பபியன் குதிரைலாயத்தில் குதிரைகளுக்குச் சேணம் கட்டியவன்.

அய்யா கவிஞரே வருக... நீங்கள் பாடினதால் குதிரை தின்ற மேய்ச்சல் நிலங்கள் வளர்ந்தன. கவி பாடப் பாட புல் வளர்ந்து பாண்டிய நாட்டில்.





டவுன்ஹால் ரோட்டில் வணிகன் நடந்து கொண்டிருந்தான். அவன் முதுகில் செல்லும் சுமையில் ஏராளமான ரகஸியங்கள். வணிகனின் கையிலிருந்த உடைவாள் தவறி விழுந்துவிட்டது, குனிந்து எடுக்கின்றான். இது என் பரம்பை வாள், பரம்பரை மீசை என்று கூவுகிறான். வழிநடை வயாபாரிகள் இரைச்சல், சந்தியை அடைக்கிறான்.

அதிசயங்கள் எல்லாம் ஏலத்தில் விடுகிறேன். எதை வேண்டுமானாலும் கேளுங்கள். துணி பொம்மையை எடுத்து ஆட்டுகிறான். இதோ அரிமர்த்தன பாண்டியன் எனக்களித்த முத்து மாலை. வைரம் பதித்த கிரீடங்கள், கோவலன் கொண்டு வந்த சிலம்பு. இரும்புத் தொப்பிகள், பரங்கியரின் துரோகத் துப்பாக்கிகள். இதைப் பாருங்கள், ஜெர்மன் நாட்டு புஸ்தகங்கள், களிமண், ஊசிகள், முடிதிருத்தும் கருவிகள், கட்ட பொம்மு பிச்சுவா, புலித்தேவன் பிடித்த வாள், அரச வஸ்திரங்கள், ஆபரணங்கள், பகல் வேஷக்காரனின் மூகமுடிகள். இரும்பு முகமுடிகள். ராஜதந்திரிகளின் சதியில் பயன்பட்ட தூதுச் சுவடிகள். சங்கேத பாஷைகள் அடங்கிய ஏடுகள், வானசாஸ்திரம், தத்துவம், சரித்திரம் படைத்த பொம்மைகள், உலகயுத்தம் ஓடித்த ஊசிகள், பூரங்கி மூக்குகள், மதுரை எரிந்த சாம்பல் கிண்ணங்கள், மண்டையோட்டு அதிசயங்கள்... மாயக்குரங்காட்டி சொல்லடா சொல்லு! மதுரைக்கு வந்த சேதியைச் சொல்லடா சொல்லு! மரப்பாச்சி குதிரைப் படை, யானைப்படை, யானை வேணுமா? குதிரை வேணுமா? எதை வேண்டுமானாலும் வாங்கலாம்! விலை சகாயம்.

கூவி விற்கிறான் கிழவன். பாதசாரிகளை வழிமறித்து முதுகை பின்னுக்கு வளைத்து வணங்கி வரவேற்கிறான். அவன் பேச்சு சாதுர்யத்தால் கூட்டமே நிற்கிறது. வியந்த கண் இமை விரித்து நிற்கிறது. எல்லாம் உங்களுக்கே! எழுத்தாணிகள் வேண்டுமா, புலமை வாய்ந்த எழுத்தாணி, ஒட்டக்கூத்தன் பிடித்த எழுத்தாணி. விலை மலவு.



Scanned with CamScanner

காலத்தை திறந்து காட்டும் பேனா வேண்டுமா. கவிஞன்; பேனா, கட்டியம் கூறும் பேனா, நாட்டின் நெம்புகோல் பேனா, விலை சகாயமான பேனா சார்!

நக்கீரன் பேனா சார். அரசியல் பேனா சார், சிகப்பு பேனா சார், பேனாவுக்குள்ள என்னருக்கு சொல்லடா சொல்லு! பேனாவுக்குள்ள பூதமிருக்கு; அற்புதபெண் இருக்கு; கேளுங்கள். ரூபாய்க்கு ரெண்டு பேனா சார்!

உங்களுக்கு வேண்டிய முகமூடிகள் முகத்தை மூடும் இரும்பு முகமூடிகள். திறந்த முகத்தை மூடும் முகமூடிகள். இத்தனையும் உங்களுக்கே, என்ன விலை... கேளுங்கள்... வாங்க சார் வாங்க.

விளக்குகள் ஏற்றிய மதுரை வீதி எங்கும் ஒப்பனை கலைந்து முகம் வீடு திரும்பும். டவுன்ஹால் ரோட்டில் விபரீத வியாபாரங்கள். கிழவனின் ஏலவிளக்கு எரிகிறது. விளக்கின் அடியில் விலைபோகாத நிழல்கள்! எல்லாப் பொருளும் ஏலத்தில் எடுக்கலாம். கிழவன் களிக்கூத்தாடுகிறான். கூட்டம் நிரம்புகிறது; தேவையான பொருட்களை வாங்கிக் கொள்கிறார்கள். பழைய பொருள் மேல் மோகம். கொலுவில் வைக்கும் பொருள். விநோதப் பொருள். வேண்டாத பொருள்மேல் புதுமோகம். எல்லாமே விலைபோகும்.

நாடகமாடி முடித்த மதுரை. அன்று அரங்கேறிய நாடகங்கள். விளக்கேந்திய காவலர்கள். தீப்பந்தம் ஏற்றி வைத்த கிராமத்தில் ஓலைக் கொட்டகையில் கிருஷ்ணலீலா பவளக்கொடி நல்லதங்காள் கோவிலன் கதைகளுக்கு போட்ட ஒப்பனைகள். இரவில் வந்துபோன கதாபாத்திரங்கள். ஸ்திரீபார்ட் வேஷங்களில் நடன சங்கீதம். திரைச்சீலைகளை அசைகின்றன. காட்சிகள் மாறுகின்றன. ஹார்மோனியம் கண்ணுச் சாமிபிள்ளை அடுத்த கட்டத்திற்கான சுதியை ஏற்றுகிறார். தைல விளக்குகளுக்கு எண்ணை ஊற்றுகிறார்கள்.





ஒப்பனைக் கண்ணாடியில் எரியும் தீப்பந்தம். வெளிச்சத்தில் அர்ஜுனன் தருமன் துரியோதனாதிகள் கிருஷ்ணன் எல்லாரும் வசனங்களை பேசிக் கொள்கிறார்கள். பாஞ்சாலி சேலையுடுத்திக் கொண்டிருக்கிறாள். துச்சாதனன் பாஞ்சாலியோடு வசனங்களை ஒத்திகை பார்த்துக் கொள்கிறான். பாரதியின் பாஞ்சாலி சபதம்.

ஜனக்கூட்டம் உற்சாகமடைகிறது. நாடகாசிரியர் நோட்டுப் புஸ்தகத்திலிருந்து அடுத்த கட்டத்துக்கான உச்சரிப்பு அடையாளங்களை எச்சரிக்கை செய்கிறார்.

ஒப்பனை மேஜை மீது ஆபரணங்களும் வஸ்திரங்களும் பட்டு உடைகளும், பவுடர் சாயங்கள், ஒட்டுத்தாடி, நரைமுடிகள், சகுனிமாமாவுக்கு ஒப்பனை நடக்கிறது. ஒப்பனைக்காரன் ஆழ்ந்து ஈடுபட்டு முகவடிவு உருவம் அணிகலன்கள் என்று சிருஷ்டியில் இருக்கிறான்.

மேடையேறிய பாஸ்கரதாஸின் நாடகங்களுக்கு உயிர் கொடுத்த ஒப்பனைக்காரன். எம்மெஸ். விஸ்வநாததாஸ் குடிகார கோவிந்தன், டிகேயெஸ் சகோதரர்கள் நடித்த பாஸ்கர தாஸின் பாடல்களை அன்று பாடாதவர்களே இல்லை. தேசியம் பற்றி... விடுதலை பற்றி... பஞ்சாப் படுகொலை பற்றி... காந்தி பற்றி... பகத்சிங் வீரம் பற்றி பாடல்களோடு ஜனக்கூட்டம் அலையென எழுந்த காலம்.

நாடகம் ஓய்ந்த வீதிகளில் ஒருவன் பாடிக்கொண்டு போகிறான். அரங்குகளுக்கு வெளியேயும் பாடல்கள். முதல் முதலில் தீவிர காங்கிரஸ் தொண்டனுக்கு ஒப்பனை செய்து கொண்டிருந்தான் கிழவன். பகத்சிங் நாடகம் திப்புவின் வீர வரலாறு கட்டபொம்மு புலித்தேவன் கதை எல்லாவற்றுக்கும் ஏற்ற ஒப்பனை நடந்தது. ஒப்பனைக்குரியவை துப்பாக்கிகள் ஈட்டிகள் கடுகருவிகள் ஒவ்வொன்றையும் கிழவன் கொண்டுவந்தான்.



Scanned with CamScanner

சரித்திரத்தில் எழுதப்படாத சித்திரமாய் போய்க் கொண்டிருந்தான் ஒப்பனைக்காரன்... கால தேச வர்த்தமானங்களில் செல்லாத வேஷங்கள் எல்லாம் வேடிக்கை காட்டும் குரளிவித்தை போலும்.

அந்த இரவுகளில் திரைச்சீலைகளுக்குப் பின்னால் லாந்தர் ஒளியில் அவன் செய்த முகங்கள் ஒவ்வொருவரும் அவனுடன். நாடகங்களில் உருவான உற்சாக கட்டங்களை அடைந்தான் கிழவன். திப்புவின் சட்டைக்கு உயிர் வந்தது. ஒப்பனைகள் எல்லாம் சரித்திரம் பேசும் அவனிடம்.

இரவானதும் கிழவன் வீடு திரும்புகிறான். அவனிடம் எந்தத் துயரமும் பாவங்களாய் மாறுகிறது. ஏலவிளக்கேந்திய படி இருளில் போகிறான். ஒப்பனைக்காரன்... பெரிய பெரிய நிழல்களோடு நகர்கிறது ஏலவிளக்கு.

* * *





# மண்ணை மணக்கச் செய்தவர்கள்

## 1. புதுமைப்பித்தன்

இவர் கடலூர் மாவட்டத்தில் உள்ள திருப்பாதிரிப்புலியூரில் பிறந்தார். தொடக்கக் கல்வியைச் செஞ்சி, திண்டிவனம், கள்ளக்குறிச்சி ஆகிய இடங்களில் பயின்றார். தாசில்தாராகப் பணிபுரிந்த அவர் தந்தை ஓய்வு பெற்றமையால், 1918-இல் அவரது சொந்த ஊரான திருநெல்வேலிக்குத் திரும்பினார். அங்குள்ள ஆர்ச் யோவான் ஸ்தாபனப் பள்ளியில் பள்ளிப் படிப்பை முடித்தார். பின்பு நெல்லை இந்துக் கல்லூரியில் இளங்கலை (பி.ஏ.) பட்டம் பெற்றார். 1932 ஜுலையில் திருவனந்தபுரத்தைச் சேர்ந்த கமலாவை மணந்தார். இவரது முதல் படைப்பான குலோப்ஜான் காதல் காந்தி இதழில் 1933-இல் வெளிவந்தது. 1934-இலிருந்து மணிக்கொடியில் இவரது படைப்புகள் பிரசுரமாகத் தொடங்கின. மணிக்கொடியில் வெளிவந்த இவரது முதல் சிறுகதை **ஆத்தங்கரைப் பிள்ளையார்.** இந்தக் காலகட்டத்தில் அவர் சென்னைக்குக் குடிபெயர்ந்தார். இவர் வாழ்ந்த இடங்களான திருநெல்வேலியையும் சென்னையையும் மையமாகக் கொண்டே இவரது படைப்புகள் அமைந்தன. இவரது சிறுகதைகள் கலைமகள், ஜோதி, சுதந்திரச் சங்கு, ஊழியன், தமிழ்மணி, தினமணியின் ஆண்டு மலர், நந்தன் ஆகிய பத்திரிக்கைகளிலும் பிரசுரமாயின. 1940இல் **புதுமைப்பித்தனின் கதைகள்** என்ற இவரது சிறுகதைத் தொகுப்பு வெளியானது. சென்னையிலிருந்த காலத்தில் இவர் ஊழியன், தினமணி மற்றும் தினசரியிலும் பணிபுரிந்தார். இவர் திரைப்படத் துறையிலும் ஆர்வம் கொண்டு ஜெமினி நிறுவனத்தின் அவ்வை மற்றும் காமவல்லி படங்களில் பணிபுரிந்தார். எம்.கே. தியாகராஜ பாகவதரின் ராஜமுக்தி திரைப்படத்திற்கு வசனம் எழுதுவதற்காகப் புனேயில் சில மாதங்கள் வாழ்ந்தார். அங்கு அவர் கடுமையான காசநோய்க்கு ஆளாகி மே 5, 1948இல் காலமானார்.



Scanned with CamScanner

2. தி. ஜானகிராமன்

ஃபெப்ரவரி 28 ல் 1921

திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி வட்டம், தேவக்குடியில் பிறந்த ஒரு புகழ்பெற்ற தமிழ் எழுத்தாளர்; தி.ஜா. என்றும் அழைக்கப்படுபவர்; சக்தி வைத்தியம் என்ற சிறுகதைத் தொகுப்புக்காக தமிழுக்கான சாகித்ய அகாதமி பரிசு பெற்றவர். தமிழின் மிகப் புகழ்பெற்ற நாவல்களான மோகமுள், மரப்பசு, அம்மா வந்தாள் போன்றவற்றை எழுதியவர்; இசையை எழுத்தாக்கிய அபூர்வ எழுத்தாளர். பத்து வருடங்கள் பள்ளி ஆசிரியராகப் பணியாற்றியவர். பின்பு அகில இந்திய வானொலியில் பணியாற்றி ஓய்வு பெற்றார். அதன் பின்னர் தமிழின் முதன்மையான இலக்கிய இதழாக விளங்கிய கணையாழி மாத இதழில் ஆசிரியராகப் பணியாற்றிய தி. ஜானகிராமன் 1982ஆம் ஆண்டு நவம்பர் மாதம் ஒரு சிறு உடல்நலக் குறைவிற்குப் பிறகு இயற்கை எய்தினார். இவர் சமையற் கலையிலும் வல்லவர். இசை, நாட்டியம், சிற்பம், ஓவியம் முதலியவற்றிலும் ஈடுபாடு மிக்கவர்.

3. ஆ. மாதவன்

ஆ. மாதவன் 1934ல் திருவனந்தபுரத்தில் பிறந்தார். அவரது தந்தைபெயர் ஆவுடைநாயகம் பிள்ளை. தாயார் செல்லம்மாள். ஆ. மாதவனின் தந்தையின் ஊர் திருநெல்வேலி மாவட்டம் செங்கோட்டை. தாயின் ஊர் நாகர்கோயில் பிளவுபடாத திருவிதாங்கூர் இருந்த காலத்திலேயே அவர்கள் திருவனந்தபுரத்துக்குக் குடியேறிவிட்டனர். அவரது தந்தை திருவனந்தபுரம் சாலை அங்காடியில் சிறுவணிகராக இருந்தார். பள்ளிப்படிப்பை முடித்த ஆ.மாதவன் மேலே படிக்கவில்லை. திராவிட இயக்க ஆதரவாளராக எழுத ஆரம்பித்தார். அவரது முதல் கதை 1955ல் 'சிறுகதை' இதழில் வெளியாகியது. பின்னர்





மலையாளம் வழியாக நவீன இலக்கிய அறிமுகம் பெற்று தீவிர இலக்கியத்தளத்தில் செயல்படலானார். அவரது முதல் சிறுகதைத் தொகுதி மோகபல்லவி கடைத்தெருக்கதைகள் இவருக்குப் புகழைத் தேடித்தந்த தொகுதிகளாகும்.

திருவனந்தபுரம் சாலைத் தெருவில் செல்வி ஸ்டோர் என்ற பாத்திரக் கடையை 75 வயது வரை நடத்திவந்தார். சாலைத் தெருவை பின்னணியாகக் கொண்டே அவரது பெரும்பாலான கதைகள் அமைந்துள்ளன. அவர் விமர்சகர்களால் கடைத்தெருவின் கதைசொல்லி என்று அழைக்கப்படுகிறார். தமிழிலக்கியத்தில் ஒரு கடைத்தெரு இலக்கியப்பதிவு பெறுவது ஆ. மாதவன் கதைகள் வழியாகவே.

1974ல் ஆ. மாதவனின் முதல் நாவலான 'புனலும் மணலும்' வெளிவந்தது. 1982ல் 'கிருஷ்ணப்பருந்து', 1990ல் அவரது மூன்றாம் நாவலான 'தூவானம்' ஆகியவை வெளிவந்தது.

மாதவன் மொழிபெயர்ப்பாளரும்கூட. 1974ல் அவர் காரூர் நீலகண்டபிள்ளை எழுதிய 'சம்மானம்' என குறுநாவலைத் தமிழாக்கம் செய்துள்ளார். மாதவனின் மனைவி பெயர் சாந்தா இவர்களுக்கு 1966ல் மணமானது; கலைச்செல்வி, மலர்ச்செல்வி என்ற இரு மகள்களும் கோவிந்தராஜன் என்ற மகனும் உள்ளனர். 2002ல் மனைவியும் 2004ல் மகனும் மறைந்துவிட்டனர். மாதவன் மகளுடன் வசித்து வருகிறார்.

4. சா. கந்தசாமி

பிறப்பு 1940ல். இவர் சாகித்திய அகாதமி விருது பெற்ற ஒரு தமிழக எழுத்தாளர். நாகப்பட்டினம் மாவட்டம் மயிலாடுதுறையில் பிறந்த இவர் 1968இல் எழுதிய சாயாவனம் புதினம் பிரசுரமானதிலிருந்து எழுத்துலகில் பிரபலமானார். இப்புதினத்தைத் தேசிய புத்தக அறக்கட்டளை நவீன இந்திய இலக்கியங்களில் சிறந்த ஒன்றாக அறிவித்தது. தான் ஒரு எழுத்தாளராக உருவாக ஜவஹர்லால் நேரு, பெரியார்,



Scanned with CamScanner

உ.வே. சாமிநாதையர் மற்றும் வெ. சாமிநாத சர்மா போன்றோரின் எழுத்துக்கள் ஆழ்ந்த அஸ்திவாரமாக இருந்தன என்பது இவரது கருத்து. தமிழக அரசின் லலித் கலா அகாதமியின் முன்னேற்றத்திற்காக இவர் ஆற்றிய பணியைப் பாராட்டும் வகையில் 1995இல் தமிழக அரசு இவருக்கு ஆய்வு உதவி ஊதியம் வழங்கி ஊக்குவித்தது. இவரது தென்னிந்திய சுட்ட மண் சிலைகள் பற்றிய ஆய்வினை அடிப்படையாகக் கொண்டு **சென்னை தூர்தர்ஷன்** காவல் தெய்வங்கள் என்னும் 20 நிமிட ஆவணப்படத்தைத் தயாரித்து வெளியிட்டது. 1998இல் விசாரணைக் கமிஷன் என்ற புதினத்திற்காக இவருக்குத் தமிழுக்கான சாகித்திய அகாதமி விருது வழங்கப்பட்டது. இவர் எழுதிய 'நிகழ் காலத்திற்கு முன்பு' எனும் நூல் தமிழ்நாடு அரசின் தமிழ் வளர்ச்சித் துறையின் 2006ஆம் ஆண்டுக்கான சிறந்த நூல்களில் சுற்றுப்புறவியல் எனும் வகைப்பாட்டில் பரிசு பெற்றிருக்கிறது.

### 5. அசோகமித்திரன் (1931)

இவரது இயற்பெயர் தியாகராஜன். இவர் தமிழில் மிக அதிகமான ஆக்கங்களை உருவாக்கிய படைப்பாளி ஆவார். பத்துக்கும் மேற்பட்ட சிறுகதைத் தொகுதிகள் வெளிவந்துள்ளன. சுமார் நூற்று ஐம்பது சிறுகதைகளை இவர் எழுதியுள்ளார். பத்துக்கும் மேற்பட்ட நாவல்களையும் பல்வேறு குறுநாவல்களையும் எழுதியுள்ளார். தமிழ் வெகுசனப் பத்திரிகைகளிலும் கணையாழி போன்ற இதழ்களிலும் தொடர்ந்து இவர் எழுதியுள்ளார். அவ்வப்போது மொழிபெயர்ப்பிலும் ஈடுபட்டுள்ளார். தண்ணீர் என்ற நாவலின் மூலம் தமிழ் நாவல் வரலாற்றில் தமக்கென ஓர் இடத்தை உருவாக்கிக் கொண்டவர். நகர வாழ்முறையில் உள்ள பல்வேறு உணர்வுத் தளங்களைத் தமது கதைகளின் மூலம் வெளிப்படுத்தியவர் அசோகமித்திரன்.





### 6. நீல பத்மநாபன்

1938-இல் நாகர்கோவிலில் பிறந்தவர். தமிழ், மலையாளம் என்ற இரு மொழிகளில் இலக்கியம் படைத்துள்ளார். சாகித்ய அகாதமி விருது பெற்றுள்ளார். கேரள மாநிலம் மின்வாரியத்தில் பணியாற்றியவர். தலைமுறைகளில் தொடங்கி 20 புதினங்களையும், 10 சிறுகதைத் தொகுப்புகளையும், 5 கவிதைத் தொகுப்புகளையும், 7 கட்டுரைத் தொகுப்புகளையும் இயற்றியுள்ளார்.

### 7. வண்ணநிலவன்

எழுபதுகளில் தீவிரத்துடன் இயங்கிய இளம் எழுத்தாளர்களில் வண்ணநிலவன் முதன்மையானவர். 'எஸ்தர்', 'பாம்பும் பிடாரனும்' என்கிற இரண்டு சிறுகதைத் தொகுப்புக்களையும், 'கடல் புரத்தில்' (1977), சம்பா நதி (1979), ரெய்னீஸ் ஐயர் தெரு (1981) முதலிய மூன்று நாவல்களையும் குறுகிய காலத்திற்குள் தந்தவர். பத்தாண்டுகளில் முப்பத்தைந்து கதைகள், மூன்று நாவல்கள், 'ஒரு நாள் குறுநாவல்' என்ற சிறப்பான பங்களிப்பு செய்தவர். இந்த வீச்சை அடுத்தடுத்த பத்தாண்டுகளில் அவரால் நிகழ்த்த முடியவில்லை. முழுநேர எழுத்தாளனாக இருந்து இயங்க முடியாச் சூழல் அவரை நெருக்கி நெருக்கி முடக்கி விட்டது. வாழ்வதற்கான பொருள் தேடலில் பல எழுத்தாளர்கள் நிறமிழந்து பின்தங்கிப் போயினர்.

### 8. யூமா. வாஸுகி

மாரிமுத்து என்னும் யூமா. வாஸுகி தஞ்சை மாவட்டம் பட்டுக்கோட்டையைச் சேர்ந்தவர். தமிழில் குறிப்பிடத்தக்க படைப்பாளர்களில் ஒருவர். இரண்டு நாவல், ஒரு சிறுகதைத் தொகுப்பு, மூன்று கவிதைத் தொகுப்புகள், ஐம்பதுக்கும் மேற்பட்ட மொழிபெயர்ப்புகள் ஓவியத் தொகுப்பு ஆகியன வெளிவந்துள்ளன. இவரது கதைப்பாத்திரங்கள் பாரம்பரிய மரபுகளைக் கேள்விக்குள்ளாக்குவன.



Scanned with CamScanner

9. சோ. தர்மன்

இவர் ஆகஸ்ட் 8, 1952ஆம் ஆண்டு பிறந்தார். தமிழகத்தைச் சேர்ந்த புதின, சிறுகதை எழுத்தாளர். கரிசல் மண் சார்ந்த வேளாண் மக்களின் வாழ்க்கையைப் பதிவு செய்யும் படைப்பாளிகளில் முக்கியமானவர். சோ. தர்மராஜ் எனும் இயற்பெயர் கொண்ட இவர் ஈரம், தூர்வை, சோகவனம் உள்ளிட்ட ஏழு நூல்களை எழுதியுள்ளார். 1992 ஆம் ஆண்டிலும் 1994ஆம் ஆண்டிலும் ஆண்டுகளில் இலக்கியச் சிந்தனையின் சிறந்த சிறுகதைக்கான விருதினைப் பெற்றிருக்கிறார். இவர் எழுதிய 'கூகை' எனும் நூல் தமிழ்நாடு அரசின் தமிழ் வளர்ச்சித் துறையின் 2005ஆம் ஆண்டுக்கான சிறந்த நூல்களில் புதினம் எனும் வகைப்பாட்டில் பரிசு பெற்றிருக்கிறது. லட்சியவாதத்துக்கும் மேன்மையான குணங்களுக்கும் இனி இடமில்லை என்று கருதப்படும் காலத்தில், மேன்மையான வாழ்க்கைக்கான அழைப்பையும், எத்தனங்களையும் கொண்டவை யூமா. வாசுகியின் கதைகள். இவர் எழுதிய ரத்த உறவு நாவல் தமிழக அரசின் பரிசு பெற்றது. மலையாளம் வாயிலாக குழந்தைகள் இலக்கிய நூல்களை மொழிபெயர்த்துக் கொண்டிருக்கிறார். தற்போது சுதந்திர ஓவியனின் தனியறைக் குறிப்புகள் என்ற நாவலை எழுதிக் கொண்டிருக்கிறார்.

10. கோணங்கி

ச. இளங்கோவன் எனும் இயற்பெயர் கொண்ட 'கோணங்கி (பிரம்மனின் கையிலுள்ள படைப்புக் கருவி எனவும் பொருள் கொள்வர்), தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டியில் வசிப்பவர். சொந்த ஊர் சாத்தூருக்கு அருகிலுள்ள தென்மேனி மேட்டுப்பட்டி. அதற்கும் கிழக்கில் பத்துக்கல் தொலைவில்தான் இருக்கிறது இவர் தாயாரின் ஊரான பெரிய நாகலாபுரம். இவ்விரு





ஊர்களினுடைய நிலப்பரப்பின் தனிமொழியில், உருவானது தான் தானியம் எனும் முதற்கதை வித்து. இது 1981இல் தாமரையிதழில் தான் விளைந்தது. தொடர்ந்து ... மதினிமார்கள் கதை (1987), கொல்லனின் ஆறு பெண்மக்கள் (1989), பொம்மைகள் உடைபடும் நகரம் (1991), பட்டுப்பூச்சிகள் உறவாடும் மூன்றாம் ஜாமம் (1994), உப்புக்கத்தியில் மறையில் சிறுத்தை 1997, 'சலூன் நாற்காலியில் சாய்ந்தபடி' (2008), இருள்வ மௌத்திகம் (2008) என்பன சிறுகதைத் தொகுதிகள். பாழி (2000), பிதிரா (2004) என்பன நாவல்கள். ஏழாண்டுகளாக உருவேறிய மூன்றாம் நாவல் 'த' (2013), கடல்கோள் நகரான 'தனுஷ்கோடி' தற்போது இவரின் புனைவு வெளிவரவுள்ளது.

- - -



Scanned with CamScanner